தமிழ்நிலத்தில் தமிழான பயிர்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயல்மொழியாம் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் தமிழ்க்கொள்கை எனும்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயற்கொள்கைக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் தமிழ்ஒழுக்கப் பயிர்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயலொழுக்கக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழர்களே! களைநீக்க வேண்டாமா? உங்கள்
சமையஉளத் தாலன்றித் தமிழுளத்தால் சொல்க!

தமிழ்நிலத்தில் மக்கள்நிகர் எனும்விளைச்சல் இல்லை!
தமிழ்நிலத்தில் சாதியெனும் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் 'ஒன்றுதெய்வம்' எனும்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் உருவணக்கக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் 'தன்னுரிமை' எனும்விளைச்சல் இல்லை!
தமிழ்நிலத்தில் அயலாட்சிக் களைவிளைச்சல் மிகுதி!
சமையஉளத் தால்இதனை எண்ணித்தூங் காதீர்!
தமிழுளத்தால் எண்ணிடுவீர் களைநீக்க எழுவீர்!

**- பாவேந்தர் பாரதிதாசன்**
குயில் கிழமை இதழ் 1.6.58

**புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனாரின்**
**134ஆவது பிறந்தநாள்!**
**பாவேந்தர் பாசறையின் 32ஆவது ஆண்டுக் கவிதைத் திருவிழா!**

நாள்: 29.4.2024 திங்கட்கிழமை, மாலை 5.00 மணி
இடம்: இக்சா மையம், எழும்பூர், சென்னை - 600 008.




முனைவர் த.கு.திவாகரன், கவிஞர் தமிழியலன், கவிக்கோ துரை.வசந்தராசன், கவிஞர் கா. முருகையன், முனைவர் இளமாறன், திருமதி சித்ராமணி மற்றும் பலர் பங்கேற்கிறார்கள்.

**பாவலர்கள் பாவேந்தர் படத்திற்கு மலர்தூவிப் பாமாலை சூட்டுவர்.**
**விரிவான செய்தி பின்னர் அறிவிக்கப்படும்.**
**அனைவரும் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம்!**

# குமுறும் நெஞ்சம்

முகம் இதழில் வெளிவந்த சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய பொறிபறக்கும் 31 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். சில பொறிகள் :

- # வக்கத்தவனுக்குத் தமிழ் வாத்தியார் வேலையா?
- # வேதமும் விஞ்ஞானமும் இணையுமா?
- # உச்சரிப்புப் பிழை நாகரிகமா?
- # இந்தி சவாரி ஆபத்தானது.
- # என்று தணியும் இந்தக் கிரிக்கெட் மோகம்?
- # கொரோனாவை விடக் கொடிய நோய்.
- # சேர நாட்டில் விபத்திற்குள்ளான தமிழ்.
- # மரணப்படுக்கையில் அச்சு ஊடகங்கள்.
- # புதுப்பிக்கப்படுமா தமிழ் இலக்கணம்?
- # மருத்துவராகும் வெறி சரியா?
- # நாடெங்கும் நாய்த் தொல்லை.




## விலை ₹250

அஞ்சல் இலவசம்

**நூலைப் பெற:** இ.ஜே.சுந்தர்

**Gpay** - 98410 68832

**வங்கி விவரம்:**

**A/c Name:** E. J. Sundar

**A/c No:** 427940665

**Bank:** Indian Bank

**IFSC:** IDIB000A098

# முசிறி பட்டணம்!



**– நிலமங்கை துரைசாமி**, விசாகப்பட்டினம்

**சே**ர நாட்டின் புகழ்பெற்ற துறைமுகப் பட்டணமாகத் திகழ்ந்த ஊர் முசிறி. இது கிரேக்கம், சீனம் மற்றும் அரபு நாடுகளுடன் கடல் வணிகத் தொடர்பினைக் கொண்டிருந்த நகரம். கிரேக்க மொழியில் இதனை 'முசுறீசு' என அழைத்திருக்கிறார்கள்.

'பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளங்கெழு முசிறி' எனும் கழகப் பாடல் வரியானது, முசிறியின் பெருமையைப் பறைசாற்றும். வெளிநாட்டினர் முசிறியில் பொன்னைக் கொடுத்துவிட்டு, நல்ல மிளகுடன் திரும்புவார்கள் என்பது இதன் பொருள். 14ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கடுமையான பேரலைப் பெருக்கினால் முசிறி அழிந்துவிட்டதாக நம்பப் படுகிறது. முசிறி அழிவுற்ற பிறகு அதன் தென் திசையிலிருந்து கொச்சி ஒரு துறைமுக நகராக உருவெடுத்திருக்கிறது.

கொச்சிக்கு வடக்கே 25 கி.மீ. தொலைவில் இருக்கும் கொடுங்கல்லூர் எனும் ஊரே பண்டைய முசிறி எனும் ஊகம் வரலாற்றாளர்களிடையே இருந்து வந்தது.

கொடுங்கல்லூருக்கு அருகாமையிலிருக்கும் பட்டணம் எனும் சிறு சிற்றூரில் மணலுக்கடியில் பழங்காலப் பானை ஓடுகள், வெளிநாட்டுக் காசுகள், சிறு சிறு மிளிரும் கற்கள் எனப் பண்டைய நாகரிகத்தை வெளிப்படுத்தும் பொருட்களை அப்பகுதி மக்கள் கண்டெடுத்து வந்தனர். இந்நிலையில் கேரள வரலாற்று ஆய்வு நிறுவனம் (KCHR) 2007ஆம் ஆண்டுமுதல் பட்டணத்தில் ஆண்டுதோறும் அகழ்வாய்வை மேற்கொண்டு வந்தது. பட்டணத்தில் ஒரு கடல்சார் வணிக நகரம் இருந்ததற்கான தரவுகள் கிடைக்கத் தொடங்கின.

ஒவ்வொரு ஆண்டும் அகழாய்வின் முடிவுகள் வெளியிடப்பட்ட போது மலையாள ஊடகங்கள் அதிக முகாமையுடன் அவற்றைக் கவனித்து வந்தன.

முசிறி அகழாய்வின் விளைவாக மலையாள அறிவுலகினர் நடுவில் தமிழ்க் கழக இலக்கியப் பாடல்கள் அதிக கவனம் பெறத் தொடங்கின. பண்டைய சேர நாட்டின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கான முதன்மை அடிப்படையாகக் கழக இலக்கியமே திகழ்கிறது. மலையாள பாவலர் மனோச் குரூர் அவர்கள் கழக இலக்கியப் பின்னணியில் எழுதிய புதினமான 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' இன்றைக்கு மலையாளக் கல்விப் புலத்தில் தவிர்க்க முடியாத புத்தகமாக மாறிவிட்டது.

'பட்டணத்தில் அமணன்' என்று பழந்தமிழில் எழுதப்பட்ட பானை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

தற்போது பட்டணத்தில் பள்ளி மாணவர்களுக்காக அருங்காட்சி யகம் ஒன்றை KCHR ஏற்படுத்தியிருக்கிறது. இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தொல்லியல் பொருட்களைக் குறித்து விளக்கம் அளிப்பதற்கு வழிகாட்டி ஒருவரும் அமர்த்தப்பட்டிருக்கிறார். கேரளாவுக்குச் சுற்றுலா செல்லும் திட்டம் வைத்திருப்பவர்கள் பட்டணத்தைப் பார்வை யிடலாம். எர்ணாக்குளத்திலிருந்து 20 கி.மீ. தொலைவிலிருக்கும் பரவூருக்குச் சென்று, அங்கிருந்து கொடுங்கல்லூர் சாலையில் சென்றால் 3 கி.மீ. தொலைவில் பட்டணத்தைச் சென்றடையலாம்.

முசிறி ஆய்வைப் பன்னாட்டு அளவில் கொண்டு செல்ல KCHR வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடனும், தொல்லியல் கழகங் களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறது.

நன்றி: **தென்மொழி** பிப்ரவரி 2024

**வா**லிபமும் பட வாய்ப்பும் இருக்கும்வரை திரைத்துறை. அதன்பின் அரசியல் களம் என்ற நடைமுறையில் திரைப்பட நடிகர் நடிகைகள் பலர் புதிய மற்றும் பழைய கட்சிகளில் தங்களை இணைத்துக் கொண்டு தங்களின் ரசிகர்கள் முன்னால் இன்றைக்கு நடிக்கத் தொடங்கியுள்ளனர். வேறு எந்தத் துறை சார்ந்தவர்களும் அரசியல் பக்கம் வரப் பயப்படும்போது, திரைத்துறையினர் மட்டும் இவ்வளவு தைரியமாக அரசியலில் குதிப்பதற்குக் காரணம், ஒன்று அவர்களின் திரைப்பட ரசிகர்களின் ஆதரவு. மற்றொன்று அவர்களிடம் அளவில்லாமல் பதுங்கி இருக்கும் பணத்தைப் பாதுகாக்கும் வழி. வசனகர்த்தா எழுதிக் கொடுத்த வசனத்தைத் தனது சொந்தக் கட்சி கருத்தாக படத்தில் பேசி ரசிகர்களை நம்ப வைத்து, கணக்கில் காட்டாத பணத்தை ஒரு தொழிலில் முதலீடு செய்வது போன்று ஒரு கட்சியை ஆரம்பிக்கின்றனர். **– ஆடானை சுகுமார், செ.53**

வீசட்டும் புதுத்தென்றல் - 11

# மரணம் மகிழ்ச்சியே!

- முனைவர் இ.ஜே.சுந்தர்



**ப**யங்களிலேயே மிகக் கொடியது மரண பயந்தான். சோகத்திலேயே கொடியது நெஞ்சுக்கு நெருக்கமானவர்களின் மரணந்தான். என் ஐந்து வயதிலிருந்து என்னோடிருந்த நண்பர் சுயராஜையும், கல்லூரிக் காலத்திலிருந்து நெருங்கிப் பழகிய நண்பர், எழுத்தாளர் மெர்வின் அவர்களையும் அண்மையில் அடுத்தடுத்து இழந்தபின் இந்தச் சோகத்தை உணர முடிந்தது. இந்த அச்சமும் சோகமும் அகற்ற முடியாதனவா? என்ற கேள்விக்குச் சமயங்களும் அறிவியலும் விடை தேட முயல்கின்றன.

மரணத்தை வெல்லுவதாகச் சொன்னவர்கள் யாரும் உயிரோடு இல்லை. மரணம் தவிர்க்க முடியாதது என்பது இன்றுவரை உண்மை. ஆனால் நாளை இந்த நிலைமை மாறக்கூடும். சாகாமை யைச் சாத்தியமாக்குவது இயலும் என அறிவியலாளர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அதன் முதல் கட்ட மாக மனித வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு வாழ்நாளை நீடிக்கவும் செய்துள்ளனர். எனினும் மரணம் இன்றைய நிலையில் தவிர்க்க முடியாததுதான்.

மரணத்தைவிட மரண பயமே ஆபத்தானது. மரண பயமே எல்லாப் பயத்திற்கும் அடிப்படை. இதுவே தனடோஃபோபியா (Thanatophobia) என்ற பெயரில் மனநோயாகி, உலகெங்கும் இலட்சக்கணக்கானோர் இதனால் சாவதற்கு முன்பே அச்சத்தில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மரணத்தைப் பற்றி இதுவரை சமயவாதிகளே மிகுதி யாகப் பேசியுள்ளனர். மரண பயத்தை உணர்த்தி மரணத்திற்குப் பின் உள்ள மறு வாழ்வைக் காட்டியே அனைத்துச் சமயங்களும் தம் நம்பிக்கைகளை நிலை நிறுத்து கின்றன. இந்தியச் சமயங்களான இந்து, சமணம், சீக்கியம், பௌத்தம் மற்றும் யூத சமயத்தின் அண்மைய உட்பிரிவு ஆகியன மரணத்திற்குப்பின் மறுபிறவி இருப்பதாகக் கூறுகின்றன. கிறித்துவமும், இசுலாமும், யூத சமயமும் மறுபிறவிக் கொள்கை யை ஏற்காது மரணத்திற்குப்பின் பாவ புண்ணியத்திற்கு ஏற்ப ஆன்மாக்கள் மோட்சத்திற்கோ நரகத்திற்கோ செல்வதாகக் கூறு கின்றன.

இறந்துபோன எம்மதத்தினரும் திரும்பி வந்து தமக்கு நிகழ்ந்ததைக் கூறியதில்லை. 'கண்டவர்கள் விண்டதில்லை, விண்டவர்கள் கண்டதில்லை'. எனினும் கோடான கோடி மனிதர்களின் நம்பிக்கைக்கு உரியனவாகச் சமயங்கள் அமைந்து அவர்களின் வாழ்வுப் பாதையைத் தீர்மானிக்கின்றன.

ஆனால், அறிவியல் இதுவரை மரணத்திற்குப் பின் மறுவாழ்வு இருப்பதை ஏற்கவில்லை. இதயமும் மூளையும் செயலிழந்தபின் எல்லாம் முடிவுக்கு வந்துவிடுகின்றன என்பதே அறிவியலின் கூற்று.

மனிதர்களின் பல அச்சங்களை நீக்கிய அறிவியல், மனிதர்களுக்குப் பேரச்சம் ஏற்படுத்தும் மரணதைப் பற்றி இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. இறப்பியல் (Thanatology) என்ற புது மருத்துவ அறிவியல் இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. 1903இல் ஏலி மெட்சினிகாஃப் (Elie Metchinikoff) என்ற ரஷ்ய நுண்ணுயிர் ஆய்வாளர்தான் இத்துறையைத் தொடங்கி வைத்தார். இறப்போரின் அனுபவங்களைப் பதிவு செய்து அவர்களுக்கு மரண பயத்தை விலக்க உதவவே இத்துறையை உருவாக்கினார். மருத்துவர்கள் உடல்கூறு பற்றிக் கற்கிறார்களே தவிர மரணிப்பவர்களைக் கவனிப்பது பற்றிக் கற்பதில்லை. இறப்பு பற்றிய விரிவான கல்வியும் இல்லை என்ற ஆதங்கத்தால் இத்துறையைக் கட்டமைத்தார். 2ஆம் உலகப்போர் மிகுவித்த மரணங்களால் பாதிக்கப்பட்ட சூழலில், ஹெர்மன் ஃபிபெல் (Herman Feifel) என்ற அமெரிக்க 'உளவியலாளர் இறப்பின் பொருள்' (Meaning of Death) என்ற நூல்வழி நவீன இறப்பியல் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். இன்று பல பல்கலைக்கழகங்களில் இறப்பியல் பாடமாக இருப்பதற்கு வழி காட்டியவர் இவரே. தொடர்ந்து 'மரண அனுபவங்கள்' என்ற நூலை எழுதிய பால் லூயிஸ் லான்ட்ஸ்பெர்க் போன்ற பலரும் இத்துறையை விரிவுபடுத்தியுள்ளனர். இன்று இறப்பியல் தொடர்பான பருவ இதழ்கள் (Death Studies, Mortality, Omega: Journal of Death & Dying, Journal of Losses & Trauma, and Illness, Crisis & Loss) பலவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1970இல் தொடங்கப்பட்ட கௌரவமாக இறத்தல் (Death with Dignity) என்ற இயக்கம், இறப்பைப் பற்றி விரிவாகப் பேசியது. நோயாளிகளின் விருப்பத்திற்கேற்ப தாமே கருணைத் தற்கொலை செய்து கொள்ளும் உரிமையை மருத்துவ ரீதியாக அனுமதிக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் பரப்புரை செய்தது. இசை இறப்பியல் (Music Thanatology) என்ற இன்னொரு துறை, இறப்போர் மற்றும் குடும்பத்தினருக்கு இசைவழி உதவுகிறது.

இதில் தேர்ச்சி பெற்றோருக்கு இசை இறப்பியல் பன்னாட்டு இயக்கம் சான்றிதழ் வழங்குகிறது. இத்துறை வல்லுநர்களை மருத்துவமனைகள் சில பணியமர்த்தியுள்ளன.

இதன் தொடர்ச்சியாக மரணத்தைத் தொட்டுவிட்டு மீண்டவர்களின் அனுபவங்களைப் பகிரும் பலரின் தொடர் முயற்சிகள் புதிய திடுக்கிடும் உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. ஆங்கிலத்தில் NDE (Near Death Experience) என்று அழைக்கப்படும் 'சாவை நெருங்கிய அனுபவங்கள்' தொடர்ந்து ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டு வருகின்றன. 1911இல் மறைமலையடிகள் எழுதிய 'மரணத்தின் பின் மனிதர் நிலை' என்ற நூல் தமிழில் இது தொடர்பான முதல் முயற்சி யாகும்.

1892இல் தொழிலாளர்கள் கட்டுமானங்களிலிருந்து வீழல், போர்வீரர்கள் பெருங்காயம் அடைதல், உயரங்களிலிருந்து தவறி வீழல் முதலியவற்றால் கிட்டத்தட்ட மரணமடைந்து பின் மீண்ட பலரிடம் பெற்ற மரண அனுபவங்களை ஆல்பர்ட் ஹெய்ம் என்ற சுவிஸ் நாட்டு அறிஞர் பதிவிட்டு இதற்கு 'மருத்துவ நோய்க்குறி' என்றே பெயரிட்டார். இந்த முதல் முயற்சியை அடுத்து 1968இல் சீலியா கிரீன் என்பார் 400 பேர்களின் உடலைவிட்டு உயிர் செல்லும் அனுபவங்களைத் தொகுத்து, ஆய்ந்து அந்த அனுபவங்கள் அனைத்தும் மன மாயை என்று முடிவு செய்தார்.

1972இல் ஜான் சி லில்லி என்பவர் எழுதிய 'மரணத்தை நெருங்கிய அனுபவங்கள் என்ற நூலில்தான் இந்த அனுபவங் களுக்கு 'என்டிஇ' என்ற சொல் முதலில் பயன்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1975இல் ரேமண்டு மூடி (Raymond Moody) என்ற உளவியல் மருத்துவர் எழுதிய மரணத்திற்குப் பின் வாழ்க்கை (Life after Life) என்ற நூல் உலகெங்கும் 13 மில்லியன் படிகள் விற்று அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. நியூயார்க் டைம்ஸ் இதழ் இவரை 'என்டிஇ இன் தந்தை' என்று பாராட்டியது. அந்த நூலில் அவர் மருத்துவ மரணம் அடைந்து மீண்ட 100 பேர்களை ஆய்ந்து அவர்களில் பெரும்பாலோரின் அனுபவங்கள் 9 படிநிலைகளில் அமைந்திருப்பதாகக் கண்டறிந்தார். அவையாவன: 1. திடீர் அமைதி. வலியிலிருந்து விடுதலை. 2. இதமான இசை, 3. தம் உடலின் மேல் பறந்து பார்வையிடல், 4. இருட்டுச் சுரங்கத்திலிருந்து வெள்ளை ஒளி வெள்ளத்தில் நுழைதல், 5. ஓர் உன்னதமான இடத்தை அடைதல், 6. மறைந்த உற்றார் உறவினரைச் சந்தித்து மகிழ்தல், 7. இறைநிலையில் தூய



ரேமண்ட் மூடி

அன்பும் ஒளியும் உணரப்படல், 8. வாழ்நாளில் செய்த நன்மை தீமைகள் தோன்றல், 9. குடும்ப நிலை கருதி உடனடியாகத் திரும்பி அனுப்பப்படல்.

இந்த அனுபவங்கள் அனைவருக்கும் பொதுவன்று. மத நம்பிக்கை சார்ந்து அவை மாறு படுகின்றன. ஆனால் பொதுவாக இவற்றை கென்னத் ரிங் என்ற ஆய்வாளர் இப்படி ஐந்தாகச் சுருக்கினார்: 1. அமைதி, 2. உடல் பிரிதல், 3. இருட்டில் நுழைதல், 4. ஒளியைக் காணல், 5. ஒளிவழி இன்னொரு இருப்பு மண்டலத்தை அடைதல். 'என்டிஇ' அனுபவம் பெற்ற பலரின் ஆளுமையும் கண்ணோட்டமும் மாறுபடுவதாகக் கூறுகின்றனர். வாழ்வை மிகவும் பாராட்டல், மற்றவர்களிடம் கருணை காட்டல், கற்றலில் ஆர்வம், ஆன்மீக நாட்டம், மரணம் பற்றிய கவலையின்மை ஆகியன அவர்களிடம் மிகுந்ததாகத் தெரிகிறது.


இந்த 'என்டிஇ' அனுப வத்தை, மயக்கம், ஆழ்ந்த உறக்கம், போதைப்பொருள் பயன்பாடு இவற்றிலும் சிலர் பெறுவதாகக் கூறப்படுகிறது. ரேமண்ட் மூடியே தற்கொலைக்கு முயன்று மீண்ட போது இந்த அனுபவங்களைப் பெற்றதாக அறிவித்தார். பௌத்த சமய தியானத்தின் வழியாக 'என்டிஇ' அனுபவத்தைப் பெற முடியும் என தலாய்லாமா கூறுகிறார்.

உலகெங்கும் 1975 முதல் 2005 வரை 3500க்கும் மேற்பட்ட 'என்டிஇ' வாக்குமூலங்கள் பதிவிடப் பட்டு 55 ஆய்வுக் குழுக்கள் இவற்றை ஆய்ந்து பல கருத்து களை வெளிப்படுத்தியுள்ளனர். 'என்டிஇ' நிகழ்வுகளின் உண்மைத் தன்மை பற்றிப் பல விளக்கங் களும் தரப்பட்டுள்ளன. உயிர் போகும் போது மதநம்பிக்கை சார்ந்து ஏற்படும் மாயத்தோற்றம், இரத்தத்தில் ஆக்சிஜன் குறையும் போது ஏற்படும் மதிமயக்கம், மூளையின் சில பகுதிகள் தூண்டப் படுவதால் நிகழும் பொய்த் தோற்றம், குழந்தை இருட்டான தாயின் கருப்பையிலிருந்து ஒளிமிக்க அறைக்கு வரும் பதிவு மீட்டுருவாக்கம் பெறல், மயங்கிய நிலையில் மருத்துவர்கள், செவிலியர்கள் காட்டும் பரிவின் வெளிப்பாடு என்று பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. நரம்பியல் செயல்பாடுகளின் வழி இவை நிகழ்வதாக, அனைத்தை யும் விளக்க முடியும் என்ற கருத்தே ஆய்வாளர்களிடம் மிகுந்துள்ளது.

ஆனால் இதற்கு மாறாகக் கருதும் ஆய்வாளர்களும் உள்ளர். உண்மையைத் தேடி நாளும் பயணிக்கும் அறிவியல் தன் கருத்தை மறுபரிசீலனை செய்யத் தயங்குவதே இல்லை. ஸ்பைவி மைக்கேல் என்பவர் டிசம்பர் 2023இல் வெளிவந்த சயன்ஸ் டைரக்ட் இதழில் எழுதிய கட்டுரையில் (Extended cognition and life after death) 'உடல் இறந்த

பின்பும் அறியும் ஆற்றல் உடலுக்கு வெளியே செயல்படுகிறது' என்பதை ஆதாரங்களுடன் நிறுவ முயன்றுள் ளார். மரணத்தைத் தொட்டுவிட்டு மீண்டவர்களிடம் 20 ஆண்டுகள் ஆய்வு நடத்திய நெதர்லாந்து இதயநோய் வல்லுநர் டாக்டர் பீம் வான் லோமெல் (Pim Van Lommel) 'லான்செட்' இதழில் எழுதிய கட்டுரை பலரின் கவனத்தை ஈர்த்தது. பல மருத்துவமனைகளில் பலதரப்பட்ட நோயாளிகளிடம் அவர் ஆய்வு நிகழ்த்திக் கண்டறிந்த உண்மைகளை 'இறப்பிற்குப்பின் உணர்வு நிலை' (Consceiousness Beyond Life) என்ற நூலாக வெளியிட்டார். பல இலட்சம் படிகள் விற்பனையாகியுள்ள இந்த நூலில், 'என்டிஇ' கற்பனையன்று. ஆக்சிஜன் குறைபாடு அன்று. உளவியல் அனுபவம் அன்று. இந்த அனுபவத்திற்குப்பின் நோயாளிகள் பல மாற்றங்களைப் பெறுகின்றனர். மருத்துவர்களும், மெய்யியல் அறிஞர்களும், உளவியலாளர்களும் கருதுவது போல மூளைக்கும் உணர்வு நிலைக்கும் ஆன தொடர்பு குறுகிய தன்று. உணர்வு நிலை மூளைக்கு வெளியேயும் இயங்குகிறது என்று அவர் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

மரணத்தின் பின் நீங்கள் மறைந்து விடுவதில்லை. உங்கள் மேல் அன்புக்குரியோர் மனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். சமய நம்பிக்கையுடையோர் கடவுளோடு இணைவதாக நிம்மதி யடையலாம். மற்றவர்களுக்கு



பீம் வான் லோமெல்

இறந்த பின் இழப்பு ஏதும் நினைவிராது என்ற சிந்தனை மரண பயத்தை நீக்கும். இறப்போரைப் பார்ப்பது, பார்ப்போ ருக்கு அச்சமேயன்றி இறப்போர்க்கு அச்சமில்லை. இயற்கை, மரணத்தை எதிர்கொள்ள துணை நிற்கும், தாங்கும் ஆற்றல், தானே வரும். உயிர்போகும் சூழலில் இயற்கை சுயநினைவை இழக்கச் செய்யும். மிகுந்த வலி ஏற்பட்டால் கனவு காண்பது போன்ற மன நிலையில், வலியை மறக்கடிக்கச் செய்யும். சாவு விடுதலை உணர்வையே வழங்கி மகிழ்விக்கும். மரணத்திலிருந்து மீண்டவர்கள் மகிழ்ச்சியையே வெளிப்படுத்துகிறார்கள். அறிவியல் நிகழ்த்திக் கொண்டிருக்கும் இறப்பியல் ஆய்வுகள் மரண பயத்தை வென்று மரணத்தை மகிழ்ச்சியாக்கும். வீசட்டும் புதுத் தென்றல்!

மின்னஞ்சல்:
ejsundar@gmail.com

அனைத்துக் கட்டுரைகளும் இணையத்தில் காண:
www.suttysundar.com

# தேர்தல் போர்!

மக்களவைத் தேர்தல்போர் நெருங்கும் நேரம்
மதிமயக்கும் சூதுரைக்கு வயப்ப டாமல்
தக்கதொரு படிப்பினையைத் தருதல் வேண்டி
தகுதியற்றோர் பதவியினைப் பறிக்கும் வாய்ப்பு!
பக்குவமே இல்லாத பதர்கள் கையில்
பறிகொடுத்தோம் பாராளும் உரிமை தன்னை!
துக்கமிதைத் துப்புரவாய்த் துடைக்கும் ஓட்டு,
துரோகிகளைத் தோற்கடிக்கும் துருப்புச் சீட்டு!

நாடுகண்ட நிறுவனங்கள் நலிவாய் விற்றே
நலத்திட்டம் பேரினிலே அடிக்கும் கொள்ளை!
காடுமலை கனிமவளம் கடலும் ஆறும்
கண்மறைத்துக் கள்வரிடம் அடங்கல் ஆக்கல்!
ஏடுதனில் இணையத்தில் வெளியிட் டாலோ
ஏற்கவேண்டும் வஞ்சகரால் சிறையின் வாழ்க்கை!
கேடுதரும் ஆட்சியர்க்கே அளிக்கும் தீர்ப்பு
கிடைக்குமந்த சந்துகளில் அடிப்பீர் ஆப்பு!

மனிதநேய மக்களாட்சி குடிமைப் பண்பை
மதித்துணர்ந்து மாநிலத்தில் செயல்ப டுத்தி
புனிதமகா இயற்கையதன் கொடையைக் காத்துப்
புதுமைகளைத் தொழில்துறையில் புகுத்திப் போற்றித்
தனியொருவன் சமத்துவமாய் சுயமாய் வாழ
தற்சார்புத் திட்டமதைத் திடமாய்த் தீட்டி
இனியதொரு மறுமலர்ச்சி கொணரும் மாந்தர்க்(கு)
இட்டிடுவாய் உன்வாக்கை அவர்சின் னத்தில்!

– **திருமதி சாந்தா பாலகிருஷ்ணன்,**
குமணன்துறை - 94421 82430


புதுக்கோட்டையில் 'கண்ணதாசன் விருது' வழங்கப் பெற்றிருக்கிறது. கிருஷ்ணா ஸ்வீட்ஸ 'தேர்ந்த ரசிகர்' என்னும் விருதும், தமிழக அரசின் அகவை முதிர்ந்த தமிழறிஞர் விருதும் இவர் பெற்றுள்ளார்.

காலமெல்லாம் கண்ணதாசனின் புகழைப் பாடிவரும் இவர், கண்ணதாசனை நேரில் பார்த்ததில்லை என்பது வியக்க வைக்கும் செய்தி. கண்ணதாசனின் பாடல்களை விரல் நுனியில் வைத்திருக்கும் இவர், அப்பாடல்கள் பிறந்த வரலாறுகளையும் அறிந்து வைத்திருக்கின்றார். இன்றைய காலக்கட்டத்தில் கண்ணதாசன் என்றவுடன் காவிரி மைந்தன் நினைவுக்கு வருவது தவிர்க்க இயலாததாகி இருக்கிறது. கண்ணதாசனைப் புகழ்ந்தேத்தும் காவிரி மைந்தனும் புகழ்ந்தேத்தத் தக்க சிறப்புக்குரியவர். இவருடைய பணி மேலும் சிறக்க வாழ்த்தி மகிழ்கிறோம்.

பேச: 94442 36999

---


# வாழ்க நூறாண்டு!



**த**மிழ்நாடு மூத்த குடிமக்கள் மற்றும் ஓய்வூதியர் நல உரிமைச் சங்கத்தின் மாநில அமைப்புச் செயலாளராகவும், சென்னை மாவட்டச் செயலாளராகவும் துடிப்போடு செயலாற்றும் **திரு. கி.சுப்பிரமணியம்** அவர்கள் 14.4.2024 அன்று தம் 85ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கின்றார்.

தமிழக தலைமைச் செயலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், நான்கு முதலமைச்சர்களை நேரில் சந்தித்து தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர். தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வு பெற்ற ஓட்டுநகர்கள் தலைமைச் சங்கத்தின் மாநிலத் தலைவராக 35 ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர். இன்றளவும் மூத்த குடிமக்களுக்காக உழைத்து வரும் இவர், நல்ல உடல் நலத்துடனும் வளத்துடனும் நூறாண்டு வாழ வாழ்த்தி மகிழ்கிறோம். தம் பிறந்தநாளையொட்டி முகம் இதழுக்கு ரூபாய் 1000/- நன்கொடை வழங்கியுள்ளார்.

# பெரியாரின் அன்பு!



இன்றைக்கு 77 ஆண்டுகளுக்கு முன்னர், சரியாகச் சொல்வதானால் 25.4.1947ஆம் நாள் இன்றைய தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினப் பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் பேசினார். 27.4.1947இல் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பொதுக்கூட்டத்தில் பெரியார் பேச வேண்டும். 25.4.1947ஆம் நாள் காயல் பட்டினம் கூட்டம் முடிந்ததும் பரபரப்பாக பெரியார் சென்னைக்குப் புறப்பட்டார்.

26.4.1947 அன்று சென்னையில் முக்கியமான நண்பரைச் சந்தித்து ஆறுதல் கூறவும், அன்பை வெளிப்படுத்தவும் காயல்பட்டினத் திலிருந்து தனது நீண்ட பயணத்தைத் தொடர்ந்தார். 26.4.1947 சென்னை சென்றதும், மாலை 3 மணியளவில் மறைந்த என்.வி.நடராசன் அவர்களிடம் 'அந்த முக்கிய நபர் வீட்டில் இருக்கிறாரா' என்று பார்த்துவரச் சொன்னார். அந்த முக்கிய நபர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

இலண்டன் பிரிவி கவுன்சில் நீதிமன்றத்தால் கொலை வழக்கி லிருந்து விடுவிக்கப்பட்டதால் சிறையிலிருந்து விடுதலை ஆகி வீட்டிற்கு வந்திருந்தார் என்.எஸ்.கிருஷ்ணன். அந்த நேரத்தில் அவருக்கு ஆறுதல் சொல்ல வேண்டியது தன்னுடைய கடமை என்று பெரியார் கருதியதால், இரவோடு இரவாக 700 கி.மீ. பயணம் செய்து சென்னை வந்துள்ளார். திரு. என்.வி.நடராசன் அவர்கள் கலைவாணர் இல்லம் சென்றபோது, கலைவாணர் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். என்.வி.என். அவர்களைப் பார்த்தவுடன் கலைவாணர் எழுந்து நின்று, அய்யா வந்துவிட்டார்களா என்று கேட்டிருக்கிறார். என்.வி.என். அவர்கள், 'அய்யா வந்துவிட்டார், தாங்கள் வீட்டில் இருக்கிறீர்களா என்று பார்த்துவரச் சொன்னார்' என்று கூறினார்.

கலைவாணர் பரபரப்புடன் திடுக்கிட்டு 'அய்யா இங்கே வர வேண்டாம். அய்யா அவர்களை நானே பார்க்க வருகிறேன்' என்று கூறி மதுரம் அம்மாவையும் அழைத்துக்கொண்டு பெரியார் இல்லம் வந்தார். மாடியில் இருந்த தந்தை பெரியார், கீழே கலைவாணர் வந்ததை அறிந்து 'நானே வந்து பார்க்க எண்ணியிருந்தேன்' என்று கூறிக்கொண்டே எழுந்து நின்றார். கலைவாணர் வேகமாக வந்து சிறு குழந்தையைப் போல் தநதை பெரியாரைக் கட்டி அணைத்துக் கண்கலங்கினார். பெரியாரும் கலைவாணரைக் கட்டி அணைத்துக்கொண்டு கண்ணீர்

மல்க, 'என் கண்ணே உனக்கு ஒரு குறையும் இல்லை. நன்றாக இருப்பாய். எதற்கும் கவலைப்படாதே' என்று தடுமாறிய குரலில் கூறினார். இருவர் கண்களும் கலங்கின. கலைவாணர் மீது பெரியார் காட்டிய அன்பைக் கண்டு அருகில் இருந்தோர் வியந்தனர்.

**- நெல்லை குமார. சுப்பிரமணியம்**
94438 52405

---

# இந்தியாவின் பெருமைமிகு தலைவர்!



**பா**பாசாகேப் டாக்டர் பி.ஆர்.அம்பத்கர் உலகின் உன்னதமான ஆளுமைகளுள் ஒருவர். உலகின் மிக நீளமான அரசியலமைப்புச் சட்டம் எனப் போற்றப்படும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைமை சிற்பி. நாட்டின் முதல் சட்ட அமைச்சராகப் பதவி வகித்தவர். பொருளாதார வல்லுநர், அரசியல் செயற்பாட்டாளர், ஆய்வாளர், பத்திரிகையாளர், வழக்கறிஞர், கல்வியாளர், சிந்தனையாளர், சமூகப் போராளி உள்ளிட்ட பன்முகங்கொண்டவர்.

மிக எளிய பின்னணியில் இருந்து வந்து பல்வேறு தடைகளைக் கடந்து அம்பேத்கர் படைத்த சாதனைகள் பிரம்மிப்பை ஏற்படுத்துவதை மறுக்க முடியாது. ஆழமான ஆய்வு முறைமைகளோடு எழுதப்பட்ட அவரது எழுத்துகளும், மொழி ஆளுமையும் வாசிக்கும் ஒவ்வொரும் புருவங்களை உயர்த்துவதைத் தவிர்க்க இயலாது. அம்பேத்கர் இயற்றிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த அல்லது மாற்ற தற்போது பலர் முயன்று வருகின்றனர். சனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமானால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கை வைப்பதைத் தடுத்தாக வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 134ஆவது பிறந்தநாள் 14.4.2024. அவருடைய பிறந்த நாளையொட்டி முகம் இதழின் புரவலர் **திருவொற்றியூர் வெ. பொன்னுரங்கம்** அவர்கள் முகம் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கியுள்ளார். அவருடைய தொண்டுள்ளத்தைப் போற்றுவோம்.

## திருக்குறள் தூதர் கவிஞர் சொ. பத்மநாபனின் நூல் வெளியீட்டு விழா!



(இடமிருந்து): முனைவர் ப. தாமரைக்கண்ணன், புலவர் பு.சீ. கிருஷ்ணமூர்த்தி, முனைவர் மீனாட்சி ஜெயக்குமார், கலைமாமணி டி.கே.எஸ். இளங்கோவன், கவிஞர் சொ. பத்மநாபன், மணிவாசகர் பதிப்பகம் இராம.குருமூர்த்தி

திருக்குறள் தூதர் சொ. பத்மநாபனின் ***தமிழ் இசையியலில் ஏற்றங்களும் மாற்றங்களும்*** என்னும் மணிவாசகர் பதிப்பகம் பதிப்பித்த நூல் வெளியீடு, சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் 27.02.2024 அன்று நடைபெற்றது. விழாவிற்கு, இராசா அண்ணாமலை மன்றம் தமிழிசைச் சங்க முதல்வர் முனைவர் வே.வெ.மீனாட்சி ஜெயக்குமார் தலைமை வகித்தார். இசைப்பேரறிஞர் கலைமாமணி டி.கே.எஸ். கலைவாணன் சிறப்புரை ஆற்றினார். நூலாசிரியர் சொ. பத்மநாபன் ஏற்புரைக்குப் பின் பட்டிமன்ற இணைச்செயலாளர் புலவர் பு.சீ. கிருஷ்ணமூர்த்தி நன்றியுரையாற்றினார். தொடக்கத்தில் பட்டிமன்றச் செயலாளர் முனைவர் ப. தாமரைக்கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

---

**முகம் இதழுக்குத் தொகை அனுப்ப:**

MUGAM
Current Account No. 54002838494
IFS Code: SBIN0007625, State Bank of India,
K.K. Nagar Branch, Chennai - 600 078.

வங்கியில் பணம் செலுத்துவோர்
அஞ்சலட்டை அல்லது புலனத்தில் விவரம் தெரிவிக்கவும்
பேசி: 94442 64111

# கொடை கொடுப்போம் நூல்களினை!

குருதியினைக் கொடையாகக் கொடுக்கும் போது
குற்றுயிராய் விபத்தினிலே துடிப்போர் தம்மின்
மருத்துவமாய் உடலறுவைச் செய்வோர் தம்மின்
மாவுயிரும் போகாமல் காக்கும் அன்றோ!
அரும்கண்ணை நாம்கொடையாய்க் கொடுக்கும் போது
அடுத்தவடி கைதடவி வைத்தே நாளும்
இருட்டினையே உலகமாக மனத்தி லெண்ணி
இடர்ப்படுவோர் ஒளிபெற்றுப் பார்ப்பார் அன்றோ!

கல்லீரல் இதயமொடு கைகள் கால்கள்
காணியலா உள்ளுறுப்பு பழுது பட்டோர்
நல்விதமாய் உயிர்வாழ உறுப்பு தானம்
நாம்செய்தால் அவருருவில் வாழ்வோம் நாமும்!
சொல்கின்ற இக்கொடைகள் உயிரைக் காக்கும்
சொன்னபடி பழுதுறுப்பை இயக்கும் மீண்டும்!
நல்லவுடல் திடத்தோடு மகிழ்ச்சி யோடே
நற்சுற்ற குடும்பமொடு வாழ்வர் அன்றோ!

உடலுயிரைக் காக்குமிந்த கொடைகள் போன்றே
உயிரறிவை ஊட்டுகின்ற நூல்கள் தம்மை
மடமையினைப் போக்குகின்ற நூல்கள் தம்மை
மனங்களினைச் செம்மைசெய்யும் நூல்கள் தம்மை
முடமாகப் படித்தப்பின் வீட்டிற் குள்ளே
மூலையிலே பயனின்றி வைத்தி டாமல்
நடமாடக் கொடையாக நாம்கொ டுத்தால்
நலிந்தவர்கள் நல்லறிவைப் பெறுவர் அன்றோ!

- **பாவலர் கருமலைத் தமிழாழன்** (ஓசூர்)

# உலகின் முதல் பெண்கவிஞர்
# என்ஹெடுவானா



முனைவர் மலையமான்
044 – 24996611

**அ**ரேபியாவின் வடபகுதியில் யூட்ரடீஸ், டைகிரீஸ் என்ற ஆறுகள் பாய்ந்தோடுகின்றன. 3000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த இரண்டு ஆறுகளின் இடைப்பட்ட நிலப்பரப்பு மெசப்பட்டோமியா என்று சொல்லப்பட்டது. இது கிரேக்கச்சொல். 'ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலம்' என்பது இதன் பொருள். (இரண்டு ஆறுகளுக்கு இடையில் உள்ள நிலம், 'அரங்கம்' என்று தமிழ்ச்சொல் கூறும். எ-டு: திருவரங்கம்). மெசப்பட்டோமியாவின் வட பாகத்தில் 'அக்கேடிய மொழி' பேசப்பட்டது. தென்பகுதியில் 'சுமேரிய மொழி' வழக்கில் இருந்தது. சுமேர் என்ற சொல்லுக்கு 'நாகரிகம் மிக்க மன்னர்களின் நாடு' என்பது பொருள். அது அக்கேடிய மொழிச் சொல் போலும். சுமேரிய மொழி பேசியோர் தம் மொழியை 'ஏமிகிர்' என்று அழைத்தனர். இதன் பொருள் 'உள்நாட்டு மொழி' என்பது. ('தம் இல்மொழி' என்பதே தமிழ்மொழி என்றானது என்பது சிலரின் கருத்து).

சுமேரியர்கள் அயலகத்திலிருந்து வந்து மெசப்பட்டோமியாவில் குடியேறியவர்கள். இது 4000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. தென்கிழக்கிலிருந்த ஒரு நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று அவர்களின் தொன்மக்கதை ஒன்று சொன்னது. அவர்கள் பழந்தமிழகத்திலிருந்து சென்றவர்கள் என்று யூகிக்க முடிகிறது. குமரிக்கண்டம் கடலுக்குள் செல்வதற்கு முன்பு அவர்கள் இங்கிருந்து சென்றிருக்கலாம். தொலைதூர அயல் இடங்களில் குடியேறிய பழந்தமிழர், தாங்கள் விட்டுவந்த ஊர்ப்பெயரைப் புதிய வாழிடத்தில் சூட்டினர் என்று ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் (இ.ஆ.ப.,) கூறினார். சுமேரியாவிலிருந்த 'ஊர்' என்ற தமிழ்ப்பெயர் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது. அங்குத் தமிழ்நாட்டுத் தேக்குமரம் கிடைத்ததாகவும் சொல்லப்படுகிறது. தமிழர் நாகரிகத்திற்குரிய சிந்துவெளி மக்கள் நகர வாழ்வினர். சுமேரியரும் நகர நாகரிகம் கொண்டிருந்தனர். மேலும் சுமேரிய வணிகர்கள் சிந்துவெளி வணிகருடன் தொடர்பு கொண்டிருந்தனர். சிந்து வெளியில் நீர்ப்பாசன வசதி, கழிவு நீர் வாய்க்கால் முதலிய சிறப்பான வசதிகள் இருந்தன. இப்படிப்பட்ட நீர் மேலாண்மை சுமேரியாவிலும் இருந்தது. சிந்துவெளியில் பட

எழுத்துகளே பயன்பாட்டில் இருந்தன. சுமேரியாவிலும் பட எழுத்துகள் இருந்தன. பிறகு, அங்கு கோடு எழுத்துகள் தோன்றின. எனவே சுமேரியர், தொல்பழந்தமிழர்களே என்று தீர்மானிக்கலாம். அறிஞர் ந.சி. கந்தையா பிள்ளையும் இக் கருத்தை முன்பே அறிவித்தார்.

சுமேரியரின் எழுத்துகள் 'கியூனிஃபார்ம்' எனப்பட்டது. அவர்கள் பச்சைக் களிமண்ணில் பலகையில் நூல்களைப் பதிவு செய்தார்கள். அது உலர்த்தப்பட்டுக் காப்பாற்றப்பட்டது. அந்தப் பலகை கள் பல அண்மைக் காலத்தில் கிடைத்துள்ளன.

அக்கேடிய நிலப்பகுதியைச் சார்கோன் என்ற மன்னன் ஆட்சி செய்தான். அவன் 'அக்கேட்' என்ற நகரத்தை நிர்மாணித்தான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அந்த இளவரசியின் இயற்பெயர் தெரியவில்லை. அவளுடைய சிறப்புப் பெயர் 'எந்நெடுவானா'. 'எந்' என்ற சொல்லுக்குத் தலைமை பூசாரி என்று பொருள். ஹெடு/எடு என்றால் ஆபரணம் (அணிகலன்). 'அனா' என்றால் விண்ணுலகம். இந்த மூன்றும் இணைந்து, எந்ஹெடுவானா என்றானது. அது பின்பு எந்நெடுவானா என்றானது. இவர் வாழ்ந்த காலம் ஏறத்தாழ கி.மு.2285 - 2250 எனப்படுகிறது. சுமேரிய மொழிப்பெயர். எந்நெடுவானா, 'நானா' என்ற நிலவுத் தேவனின் கோயிலில் தலைமைப் பூசாரியாக இருந்தார். சுமேரியாவில் 'ஊர்' என்ற ஊரிலிருந்த இனானா தேவதையின் கோயிலிலும் பூசாரியாகச் செயற் பட்டார். (சுமேரியாவில் அமைந்திருந்த கோயில் 'சிகுராட்' என்பது). இனானா தேவதை, காதல் தெய்வம்/அழகுத் தெய்வம், நீதித் தெய்வம், போர்த்தெய்வம். இவள் நிலவுத் தேவனான நானாவின் மகள்.

எந்நெடுவானா மிகுந்த செல்வாக்குடன் விளங்கினாள். இனானா வழிபாட்டு முறையை உருவாக்கினாள். அதை எங்கும் பரப்பினாள். அவள் ஆளுமை மிக்கவள். அவள் பெண்ணியத்தைப் போற்றியவள். மேலாண்மைத் திறம் மிக்கவள். அவள் அறிவியல் அறிஞரும் ஆவாள். பெருங்கவிஞராகவும் திகழ்ந்தாள்.

மிகுந்த உயரத்தில் உலவும் விண்கல், வீழ்ச்சி பெறுவதும் உண்டு. அதிகாரத்தின் உச்சத்தில் இருந்த எந்நெடுவானா, வாழ்வில் மிகவும் தாழ்வு நிலை பெற்றாள். 'லுகன்ஆண்' என்ற புரட்சியாளன் சுமேரிய அரசுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினான். அவனுடைய கை ஓங்கியது. அது எந்நெடுவானாவையும் பாதித்தது. அவள் பூசாரிப் பதவியை இழந்தாள். நகரத்தை விட்டே தப்பி ஓடினாள். சிலகாலம் மிகவும் வாடினாள். நானா தெய்வத்தைப் பணிந்து வேண்டினாள். பிறகு, அவளுக்கு நல்ல காலம் பிறந்தது. நாட்டில் அமைதி

நிலவியது. அவளுக்குப் பழைய பதவி கிடைத்தது. அவள் பூசாரி ஆனாள். இறக்கும் வரை அப்பதவியில் இருந்தாள். அவள் சுமேரிய மொழியில் பாடல்களை எழுதினாள்.

எந்நெடுவானாவின் படைப்புகளில் 6 நெடும் பாடல்களும் 42 கோவில் திருப்பாடல்களும் இன்று கிடைத்துள்ளன. இனானாவின் பெரும்புகழ் (நின்-மிசார்-ரா) (Exaltation of Inana) என்பது நெடும்பாடல் நூல். (153 அடிகள்). இந்த நூல் மிகவும் பழைமையானது. புகழ்பெற்ற எகிப்திய நூலான 'இறந்தோரின் புத்தகம்' (Book of the Dead) என்பதைவிட இது 700 ஆண்டுகள் பழைமையானது என்று ஜோ. ஜேன்சு சொன்னார். சீன நாட்டின் பழைமை மிக்க நூலான இ-சிங் (இதன் பொருள் 'மாற்றங்கள்') என்பதைவிட இது 1000 ஆண்டுகள் பழைமையானது. ஓமரின் ஒடிசி, இலியட் என்ற காப்பியங்களைவிட இந்நூல் 1500 ஆண்டுகள் பழைமையானது.

'இனானாவின் பெரும்புகழ்' என்ற நூலில் எந்நெடுவானாவின் வாழ்க்கை எதிரொலித்தது. அவருடைய பதவி இழப்பு, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட நிலை, தெய்வத்திடம் வேண்டுதல் முதலியவை இந்த நூலில் அடங்கியுள்ளன. டேவிட் காப்பர் ஃபீல்டு என்ற நூலில் அதன் ஆசிரியர் சார்லஸ் டிக்கன்சனின் வாழ்க்கை மறைவாகக் கூறப்பட்டது. ஆனால் 'இனானாவின் பெரும்புகழ்' என்ற நூலில் இந்தக் கவிஞரின் வாழ்வு வெளிப்படையாகச் சொல்லப் பட்டுள்ளது. அதில் உள்ள பாடல் ஒன்று,

*என் தலைவியே,*
*உன் வலிமையால்*
*பற்கள் கூட கற்களை உடைக்கும்!*
*கடும் புயல்போன்ற போரில்*
*நீ (பகைவனைத்) தாக்குவாய்!*
*இடிமுழக்கம்போல்*
*குரல் எடுத்து முழங்குவாய்!*
*கடும்புயல் கடவுளின் குரல்போல்*
*முழக்கம் செய்வாய்!*

- என்பது அது.

அச்சம் தரும் சக்தி தேவதை (இன்-நின்-மெகு-சா Godess of feersome divine powers) என்பது அவருடைய மற்றொரு பாடல் நூல் (184 அடிகள்). தன்னை மதிக்காத - அஞ்சி அடிபணியாத எபி மலைத் தொடரை இனானா தெய்வம் வென்றதை இந்தப் பாடல் கூறுகிறது. 'பேரிதயம் கொண்ட பெருமாட்டி' என்ற கவிதை நூல் (இன்-நின்-ச-ரா - The great hearted Mistress (274 அடிகள்) இனானாவின் பண்புகள் பற்றிப் பாடுகிறது. இனானாவின் கீழ் உலகப் பயணம் (Descent of Inana) என்பது அவருடைய மற்றொரு நூல். கவிஞரின் தமக்கையான எரசுகிகல்லைக் காண்பதற்கு இனானா கீழுலகம் (பாதாளம்) சென்றதைப் பற்றி இந்நூல் சொன்னது. போரின் அவல ஓலம் (The Lament to the sprit of war)

என்ற அவருடைய மற்றொரு படைப்பு, போரின் அவலங்களை எடுத்துரைத்தது. கோயில் திருப்பாடல்கள் - 42 (42 Temple Hymns) என்பதும் எந்நெடுவானாவால் பாடப்பெற்றது. இவற்றில் பெரும்பாலான பாடல்கள் இனானாவைப் பற்றியவை. திருஞானசம்பந்தர் சில பாடல்களில் தன் பெயரைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார். (தமிழ் ஞான சம்பந்தன்; துளங்கில் தமிழ்; ஞானசம்பந்தன் உரை செய்த திருநெறியத் தமிழ்). இவரைப் போல், சுமேரியக் கவிஞர் ஒரு பாடலில் தன் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். கோயில் திருப்பாடல்களில் வான் கடவுள் ஆன், நீர்க்கடவுள் என்கி, காற்றுக் கடவுள் எனலில், பயிர்க் கடவுள் நினுர்சாக், சூரியக்கடவுள் உடு முதலிய தெய்வங்களைப் பற்றிப் பாடப்பட்டுள்ளன. 1927இல் லியானார்டு உல்லி ஊர் நகரில் அகழாய்வு செய்தபோது சுண்ணாம்புக்கல் வட்டுப் பலகை ஒன்று கிடைத்தது. அதிலுள்ள பெண் சிற்பம் எந்நெடுவானாவின் உருவமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

– **மூலம்:** Ehneduanna: The first known Auther - Bettt Meador.
The Exaltation of Inana: Trnas. Sophus Helle.

தமிழில் ஆராய்ச்சி தொகுதி 43.
- சி. மெய்கண்டான் கட்டுரை, 'சுமேரிய ஔவையார்'.


# முகம்

**உரிமை மற்றும் வெளியீடு பற்றிய விவரம்**
(அறிக்கை படிவம் IV விதி எண்.8இன்படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடப்படும் இடம் | : | 26, பாரதிதாசன் தெரு திருநகர், சாபர்கான்பேட்டை, சென்னை-600 083. |
| 2. அச்சிடுபவர் | : | கே. பத்மநாபன், எபீசியன்ட் பிரிண்ட்ஸ் 1, நரசிம்மன் தெரு, மேற்கு மாம்பலம் சென்னை-600 033. |
| 3. வெளிவரும் காலம் | : | மாதந்தோறும் |
| 4. வெளியிடுபவர் | : | வே.நாராயணசாமி தமிழர், 26, பாரதிதாசன் தெரு, திருநகர், சாபர்கான்பேட்டை சென்னை-600 083. |
| 5. ஆசிரியர் பெயரும் முகவரியும் | : | வே.நாராயணசாமி தமிழர், 26, பாரதிதாசன் தெரு, திருநகர், சாபர்கான்பேட்டை சென்னை-600 083. |
| இதழ் உரிமையாளர்: பெயரும் முகவரியும் | : | வே.நாராயணசாமி தமிழர், 26, பாரதிதாசன் தெரு, திருநகர், சாபர்கான்பேட்டை சென்னை-600 083. |

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்தவகையில் உண்மையானவை என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

சென்னை-83 (ஒம்) வே.நாராயணசாமி
25.03.2024 வெளியிடுபவர்

# முகத்தில் முகம் பார்க்கலாம்

(15 ஆம் நாளுக்குள் வரும் திறனாய்வுகள் மட்டுமே வெளியிடப் பெறுகின்றன. உங்களைக் கவர்ந்த ஓரிரு படைப்புகளை மட்டுமே திறனாய்வு செய்க!)

☆ **புலவர் பு.சு. ஆறுமுகம்** (அத்திமாஞ்சேரி): முனைவர் மலையமானின் 'அயலகங்களில் பரவிய கம்பனின் பார்வை' மிகச் சிறந்த கட்டுரை. (ஆ) 'வினாவும் கேள்வியும் ஒன்றா?' - குடந்தய் வய்.மு. கும்பலிங்கனாரின் விளக்கம் மிகச் சிறப்பு. பொதுவாக ஒவ்வொரு திங்களும் முகம் இதழ் அறிவுக் கருவூலமாக வெளியாகிறது.

☆ **சோலை தமிழினியன்** (செ.11): 'வாக்குச்சீட்டு முறை வேண்டும்' தலையங்கம் அமலுக்கு வந்தால் வளர்ந்துவரும் தொழில் நுட்பத்தைச் சிலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது நிறுத்தப்படலாம். நல்ல சிந்தனையை உரிய நேரத்தில் தலையங்கமாக வெளியிட்டது பாராட்டத் தக்கது. (ஆ) 'மருந்துப்போலி போலியா?' முனைவர் இ.ஜே.சுந்தரின் கட்டுரை அருமை. உணவே மருந்து என்கின்ற காலம் மாறி, மருந்தே உணவு என்கின்ற இக்காலத்தில் கட்டுரையாளர் சொல்லும் 'பிளாசிபோ தத்துவம்' மிக அவசியமான ஒன்று. (இ) புலவர் ந. ஞானசேகரன் பற்றிய கட்டுரை வாசிக்க வாசிக்க தமிழ் மணக்கிறது. இவர் இளமையிலேயே பாவலர் க. மீனாட்சிசுந்தரம் அவர்களின் பயிற்றுவிப்பில் உருவானவர் என்பதைப் படிக்கும்போது பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

☆ **ஓவியர் மு. ஷேக்** (பம்மல்): வாக்குச் சீட்டு முறை அவசியம் என்ற தலையங்கம் தேவையான ஒன்று. (ஆ) முனைவர் இ.ஜே.சுந்தர் அவர்களின் 'மருந்துப் போலி' கட்டுரை திகைக்க வைத்தது. (இ) நகைக்க வைக்கும் நீதித்துறை 'சுருக்' என்று இருந்தது. தெளிவோம்!

☆ **திருமதி சாந்தா பாலகிருஷ்ணன்** (குமணன்துறை): மக்களாட்சி தத்துவம் குறித்த தலையங்கம் சிந்திக்கத் தூண்டுகிறது. சண்டிகார் மேயர் தேர்தலில் தேர்தல் அதிகாரி வாக்குச்சீட்டில் திருத்தம் செய்த சனநாயகப் படுகொலை அம்பலமாகியுள்ளது. இந்த மேயர் தேர்தலிலேயே பா.ச.க. இப்படித் தகடுதத்தம் செய்கிறதென்றால், பாராளுமன்றத் தேர்தலில் பா.ச.க.

எந்த எல்லைக்கும் போகும் என்பது தெளிவாகிறது. (ஆ) முகப்போவிய நாயகர் புலவர் ந. ஞானசேகரன் அவர்கள் தலைமையாசிரியராக இருந்தபோது அவரிடம் நான் பதினான்கு ஆண்டுகள் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளேன்.

☆ **புலவர் தங்க. சங்கரபாண்டியன்** (பொழிச்சலூர்): வாக்குச் சீட்டு முறை வேண்டும் என்ற தலையங்கம் காலத்தின் கட்டாயம். (ஆ) இனிய நண்பர் புலவர் ந. ஞானசேகரனைப் பற்றிய இளமாறனின் கட்டுரை அருமையிலும் அருமை. (இ) மனிதன் மட்டுமே சிந்திக்கிறவன் என்னும் வே. ஆனைமுத்துவின் கட்டுரையில் 'மனிதன் மட்டுமே சிந்திக்கிறான். அவனால் மட்டுமே கொள்கைகளை உருவாக்க முடியும்' என்ற வரிகள் அற்புதம். (ஈ) இனிக்கும் காலம்!, நெஞ்சு பொறுக்குதில்லையே! இரண்டு கவிதைகளும் வெகு சிறப்பு.

☆ **வேலூர் மூர்த்தி** (செ.100): பா.ச.க. 370 தொகுதிகளில் வெற்றிபெறும் என்று அமித்ஷா சொல்லுவது ஈ.வி.எம். இயந்திரத்தின் மீதுள்ள நம்பிக்கையில்தான். (ஆ) 'வயலும் பள்ளியும்' கருத்துப்படம் அருமை. (இ) இனி நடைபெறும் தேர்தல்களில் நீதிபதிகள் வேட்பாளர்களாக வருவதும் தொடரும். (ஈ) ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று முதலில் தீர்ப்பு வந்தபோதே அதை இறுதித் தீர்ப்பாக எழுதியிருந்தால் 17 அதிகாரிகள் மீது நடவடிக்கை, 13 பேருக்கு இறுதி யாத்திரை நடக்காமல் இருந்திருக்கும்.

☆ **மரு.க. கோபால்** (அரும்பாவூர்): மீண்டும் வாக்குச் சீட்டு முறைக்கு மாற வேண்டியது நயன்மையான தேர்தல் நடக்க வாய்ப்பாக இருக்கும். (ஆ) 'மருந்துப் போலி விளைவு' (Placebo effects) அனைத்து நோய்களுக்கும் தீர்வன்று. சில மனம் சார்ந்த நோய்களுக்கு வேண்டுமானால் தீர்வளிக்கக் கூடும். (இ) இட ஒதுக்கீட்டின் பயனை அனுபவிக்கும் இளம் வயதில் பழங்குடியினப் பெண் நீதிபதியாகத் தம்மை தகவமைத்துக் கொண்டதற்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள். (ஈ) ஆசிரியர் கு. வரதராசனாரின் நூலிலிருந்து வே. ஆனைமுத்துவின் பொழிவை சுட்டியமைக்கு மெத்த மகிழ்ச்சி.

☆ **புலவர் ந. ஞானசேகரன்** (திருலோக்கி): கம்பனின் கவித்துவப் பார்வை உலகெங்கும் எவ்வாறு பரவி தமிழை உயர்த்தியுள்ளது என்பதை மலையமானின் எழுத்து புலப்படுத்திற்று. (ஆ) வினாவும் கேள்வியும் வேறுபட்டவை என்பதை ஆய்வறிஞர் கும்பலிங்கனார் தெளிவாக விளக்கியுள்ளார். (இ) 'மனிதன் மட்டுமே சிந்திக்கிறான்' என்று

கூறியுள்ள வே. ஆனைமுத்து, பார்ப்பனீயம் நேரு காலத்திலேயே என்ன பாடுபடுத்தியுள்ளது என்பதைப் புரிய வைத்துள்ளார்.

☆ **தென்னிலை இராம. கோவிந்தன்:** சண்டிகார் மாநகராட்சி மேயர் தேர்தலில் பா.ச.க.வுக்கு ஆதரவாக நடந்துகொண்ட தேர்தல் அதிகாரியின் செயலை உச்சநீதிமன்றம் கண்டித்திருப்பது நீதித்துறையின் மீது நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது. (ஆ) ஐந்தரை ஆண்டுகளில் உலகத் திருக்குறள் கூட்டமைப்பு தமிழர் இல்லங்களில் திருமண விழா முதல் நினைவேந்தல் வரை அனைத்தையும் தமிழ் மொழியில் நடத்துவதற்கான ஆசான்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

☆ **நடுவிக்கோட்டை நவீன்குமார்:** முதுமையைப் புறந்தள்ளி, தமிழிலக்கியப் பணியில் தொடர்ந்து பயனிக்கும் புலவர் ந. ஞானசேகரன் அவர்களை அறியத் தந்தமைக்கு நன்றி! (ஆ) வினாவும் - கேள்வியும் ஒன்றா? கட்டுரை கவனிக்கத் தக்கது. கேள்விச் செல்வம் வாடகை வீடு; கல்விச் செல்வம் சொந்த வீடு! எனக் கும்பலிங்கனார் கூறியிருப்பது அருமை. (இ) திரும்பத் திரும்ப வாசிக்க வைத்தது, 'மறுத்துப்பின் கைபிடித்த மங்கை' என்னும் மு. வெங்கடேசபாரதியின் செவ்விலக்கியக் கட்டுரை.

☆ **பாவலர் கருமலைத் தமிழாழன்** (ஓசூர்): 'தமிழில் வண்ணப் பூச்சுகள்' மனம் மகிழ்வடையுமாறு தந்த தகவல். அங்காடிப் பெயர்களை ஆங்கிலத்தில் வைக்கும் தமிழ்நாட்டில், தான் தயாரிக்கும் வண்ணப் பூச்சுக் கலவைக்குத் தூய தமிழில் பெயர்கள் வைத்துள்ள திரு. சீனிவாசனைப் பாராட்டி விழாவே நடத்த வேண்டும். அப்போதாவது தமிழில் பெயர் சூட்டாதவர்களுக்கு அறிவு வருமா எனப் பார்க்கலாம்.

☆ **கவிஞர் தமிழ்வேலி** (வேலூர்): தன்னம்பிக்கை எழுத்தாளர் மெர்வின், கயல் தினகரன், பாசுரப்பாவலர் வேணு.குணசேகரன் ஆகியோர் மறைவுக்கு வீர வணக்கம். (ஆ) எங்கள் ஆசான் திருலோக்கி ஞானசேகரன் அவர்களின் முகப்போவியம் வெளியிட்டமைக்கு நன்றி. (3) கவிஞர்கள் சாந்தா பாலகிருஷ்ணன், தளவையார் கவிதைகள் அருமை.

☆ **நெல்லை அந்தோனிராஜ்** (செ.64): அருமை நண்பர் மெர்வின் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன். நெல்லை மாவட்டம் சுரண்டை என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். முன்னோர்கள் காந்தியவாதிகள்.

***கடிதம் எழுதுவோர் தெளிவான கையெழுத்தில் எழுதவும்.***

***அல்லது தட்டச்சு செய்து அனுப்பவும். - ஆர்.***

# நீட்டு தமிழ்வாளை நீட்டு!

ஆண்மை மலைவிட்டே அச்சக் கடல்பாய்ந்தாய்!
மேன்மை விசும்புதனை விட்டுக்கீழ் - ஏன்வீழ்ந்தாய்?
முட்டும் பகைக்காளை மூக்கில் கயிறேற்றிக்
கட்டு துணிவுத்தூண் கட்டு!

வஞ்சக் கொடுவாளின் வாய்கருக் கேற்றிநம்
நெஞ்சக் கழுத்தறுக்க நின்றிருப்பார் - நஞ்சருமே!
கிட்டும் உரிமை கெடுப்பார் செயற்றலையில்
கொட்டு நெருப்புமழை கொட்டு!



ஆரியத் தீப்பிழம்(பு) ஆற்றல் தமிழ்க்குடிமேல்
ஏறியே தீய்க்குவினை இற்றுவிழப் - போரியற்று!
வாட்டும் அவர்நெஞ்ச வன்மத்தின் வாலறுக்க
நீட்டு தமிழ்வாளை நீட்டு!

இந்திக் கொடுமுதலை ஏப்பமிட வாய்திறந்து
முந்தை தமிழ்விழுங்க முந்துவதைச் - சிந்திப்பாய்!
பட்டுத் தமிழ்விழுங்கப் பார்த்துக் கிடப்போரைக்
குட்டு நிலமழுந்தக் குட்டு!

சாதி மதச்சாட்டை தன்னைமதிக் கைக்கொண்டு
வீதி வருகின்ற வீணரினை - மோதியழி!
நாட்டைக் கெடுக்குமந்த நச்சிற்கு நச்சூட்டி
நாட்டு புகழ்க்கொடியை நாட்டு!

பொய்ப்பிணத்தைத் தூக்கிப் புலமெல்லாம் சுற்றிவந்து
மெய்மணத்தைத் தாக்குவதும் மேலாமோ? - உய்யுநமை
ஒட்டிக் கெடுப்பாரை ஒப்போலைக் கையாலே
நெட்டு நிலம்விடுத்தே நெட்டு!

- சின்னமணல்மேடு **த. இராமலிங்கம்**
94424 41118

# பாத்திரம் முழுக்கத் தண்ணீர்!

**- முனைவர் வா. நேரு**



அப்பப்பா, எனது வாழ்க்கையில் இப்படி ஓர் உக்கிரமான வெயிலை இதுவரை நான் கண்டதில்லை! உடலில் ஆறு போல ஓடும் வியர்வையைத் துடைத்தபடி 70 வயதாகும் தாத்தா தன் பேரனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். வெயிலில் இருந்து வயதானவர்களும், இதய நோய் உள்ளவர்களும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

நீர்ச்சத்து உள்ள பழங்களைச் சாப்பிட வேண்டும். நீர்ச்சத்து குறையாமல் இருக்க வெளியில் பகலில் எங்குச் சென்றாலும் கையில் தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும். மதியம் 12 மணி முதல் 3 மணி வரை வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனத் தமிழ்நாடு அரசு அறிக்கை கொடுத்திருக்கிறது. மாலையில் குளிப்போம் என்று போனால் ஹீட்டர் போடாமலேயே தண்ணீர் அப்படி அனலாய்க் கொதிக்கிறது. இதில் கலந்து குளிக்க பச்சைத் தண்ணீருக்கு எங்கே போவது என்று மனம் தடுமாறுகிறது. என்ன ஆயிற்று நம் சூழலுக்கு? ஆயிரக் கணக்கான கேள்விகள் நம்மைச் சுற்றி எழுகின்றன.

நம்மைச் சுற்றி நிகழும் இந்த நிகழ்வுகளுக்குக் காரணம் புவி வெப்பமாதல், காலநிலை மாற்றம் என்று அறிவியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அடுத்தவர் போட்டுத்தந்த குடிசைக்குள் வசிக்கப்போன குரங்கு, தானாகவே பிய்த்துப் பிய்த்து, குடிசையை ஓட்டையாக்கி, வெயிலிலும் மழையிலும் காய்வது போல, இயற்கையாக அமைந்த இந்தப் பூமியை மனிதர்கள் தங்கள் சுய நலத்திற்காகக் கெடுத்துக் கெடுத்து ஒட்டுமொத்த உலகிற்கும், உலகில் வாழும் அத்தனை உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பாதகச் செலைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பெரிய பாத்திரத்தை வைத்து, பாலை ஊற்றச் சொன்னபொழுது, நாம் ஊற்றும் தண்ணீர் என்ன தெரியவா போகிறது என்று எல்லோரும் தண்ணீரை ஊற்ற, பாத்திரம் முழுக்கப் பாலுக்குப் பதிலாகத் தண்ணீரே நிரம்பி இருந்தது என்னும் கதைபோல நம்மால் தானா சுற்றுச் சூழல் கெடப் போகிறது, புவி வெப்பமடையப்

போகிறது என்று உலகில் இருக்கும் ஒவ்வொரு மனிதரும் நினைக்க, ஒவ்வொரு நாடும் எச்சரிக்கைகளை அலட்சியப்படுத்த, உலகம் ஓர் இருண்ட காலத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

பொறுத்தது போதும், பொங்கி எழுவோம் என ஜெர்மன் உள்ளிட்ட பல நாட்டு அறிவியல் அறிஞர்கள் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்தனர். அதைப் பற்றிய விரிவான செய்தியை பி.பி.சி. தமிழ்ப் பதிவு செய்திருக் கிறது. விஞ்ஞானிகள் என்றால் அறிவியல் ஆய்வுக் கூடங்களில் அமர்ந்து ஆய்வுகளை மேற்கொண் டிருப்பார்கள். தங்களது ஆய்வு களை அறிவியல் இதழ்களில் எழுதிக் கொண்டிருப்பார்கள் என்ற புரிதல்தான் உலக அளவில் வெகுஜன மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. தங்களைப் பற்றிய இந்த வரையறைக்கு மாறாக, தற்போது உலகெங்கிலும் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றார்கள் அவர்கள்.

பருவநிலை மாற்றத்தைத் தடுக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க உலக நாடுகளை வலியுறுத்தி விஞ்ஞானி கள் தங்களது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து இனியும் அறிவியல் இதழ்களில் பேசிக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் இதன் விளைவாக பூமி மிகப்பெரிய ஆபத்தை எதிர்நோக்கி உள்ளது என்கின்றனர் அவர்கள்.

விஞ்ஞானிகளின் சர்வதேச கூட்டமைப்பான Scientist Rebellion இந்தப் போராட்டங்களை ஒருங் கிணைத்து நடத்தி வருகிறது. இதில் பங்கேற்றுள்ள விஞ்ஞானிகளின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டியுள்ளதாகக் கூறுகிறது இந்த அமைப்பு. போராடும் விஞ்ஞானி களைக் கைது செய்வது போன்ற நேரடி நடவடிக்கைகளை பல்வேறு நாடுகள் கடந்த ஓராண்டாக மேற்கொண்டு வருகின்றன. அறிவியல் அறிஞர்களே வீதிகளில் இறங்கிப் போராட ஆரம்பித்துள்ளார் கள். ஏனென்றால், வரக்கூடிய ஆபத்து அப்படிப்பட்ட ஓர் ஆபத்து. உலகத்தைப் பேராபத்து சூழக் கூடிய நிலை இருக்கும்போது உலகில் பல நாடுகளின் தலைமைகள் நம் நாட்டுப் பிரதமர் போலவே வெற்று வாக்குறுதிகளைத் தருகிறவர்களாக இருக்கிறார்கள். கொடுத்த வாக்குறு திகளை நிறைவேற்ற வேண்டுமே என்னும் எண்ணம் இல்லாதவர் களாக இருக்கிறார்கள். தாங்கள் பதவியில் நீடிப்பதற்காகப் பல்வேறு வேடங்களைப் போடுகிறார்கள் என்ற நிலையில் அறிவியல் அறிஞர்கள் களத்தில் இறங்கியிருக் கிறார்கள்.

பருவநிலை மாற்றம் தொடர்பாக கடந்த 40 ஆண்டுகளாக போதுமான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இந்த ஆய்வுகளின் அடிப்படையில், பருவநிலை மாற்றத்தைத் தடுப்பதற் கான விரிவான தீர்வுகள் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. ஆனால் இந்தத் தீர்வுகளைச்

செயல்படுத்துவதற்கான நடவடிக் கைகளை உலக நாடுகள் முனைந்து எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்றனர் போராட்டத் தில் இறங்கியுள்ள விஞ்ஞானிகள்.

தொழிற் புரட்சிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடுகையில், சராசரி உலக வெப்பநிலை உயர்வை 2 டிகிரி செல்சியசுக்குக் குறைவாக வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டு, பாரிஸ் பருவநிலை மாநாட்டில் உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டது. உலகின் சராசரி வெப்ப நிலை உயர்வை குறைந்தது 1.5 டிகிரி செல்சியசுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் வலியுறுத்து கின்றனர். இந்த இலக்கை எட்ட வேண்டும் என்றால், கார்பன் வெளியேற்ற அளவானது 2019இல் இருந்ததைவிட 2030க்குள் 43% குறைக்கப்பட வேண்டும்.

ஆனால் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், கார்பன் வெளியேற்றம் குறைவ தற்குப் பதிலாக அதிகரித்து வருகிறது என்று புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு நாடும் கார்பன் வெளியேற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் உலகம் வெப்பமடைந்து, மக்கள் மிகப் பாதிப்புக்கு உள்ளாவது தவிர்க்க முடியாது.

கரியமில வாயுவை வைத்து தான் கார்பன் வெளியேற்றம் கணக்கிடப்படுகிறது. அதாவது ஒவ்வொரு நாடும் கரியமில வாயுவை உறிஞ்சுகிறது, வெளியிடு கிறது. வெளியிடுவதைவிட உறிஞ்சக்கூடிய தன்மை அதிகமாக இருந்தால் அந்த நாடு கார்பன் நெகட்டிவ் நாடு எனப்படுகிறது. உலகம் கார்பன் நெகட்டிவ் உலகமாக மாற வேண்டும். அப்போதுதான் புவி வெப்பமடைதல் குறையும்.

இன்று உலகின் முதல் கார்பன் நெகட்டிவ் நாடு என்ற சாதனையைப் படைத்து, உலகிற்கே வழிகாட்டியாக பூடான் மாறி யிருக்கிறது. 2017இன் தரவுகளின் படி பூடானில் உமிழப்படும் கரியமில வாயுவின் அளவு சுமார் 22 இலட்சம் டன். ஆனால், பூடான் நாட்டின் அடந்த காடுகள் இதைவிட மூன்று மடங்கு கூடுதல் கரியமில வாயுவை உறிஞ்சும் திறனைக் கொண்டிருக்கின்றன.

பூடானின் அரசியலமைப்பு அதன் நிலப்பரப்பில் குறைந்தது 60 சதவிகிதம் காடுகளால் நிறைந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. பூடானின் நிலப்பரப்பில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகள் பாதுகாக்கப்பட்ட தேசிய காடுகள், இயற்கை இருப்புகள், காட்டுயிர் பாதுகாப்புப் பகுதிகளாக உள்ளன.

பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் காடுகளைப் பாதுகாக்கவும், வேட்டையாடு தலைத் தடுக்கவும் உதவுகின்றனர். முக்கியமாக, பூடான் அரசின்

'தூய்மையான பூடான்' அல்லது 'பசுமைப் பூடான்' போன்ற தேசிய வனப் பாதுகாப்புத் திட்டங்கள் மிகுந்த வீரியத்துடன் செயல்படு கின்றன.

தற்போது, உலக அளவில் தண்ணீர் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, காற்று மாசுபாடு, தண்ணீர் மாசுபாடு உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளாத நாடாக பூடான் உள்ளது என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் பூடான் போல மாற வேண்டும். அதற்கு நிறைய மரங்களை வளர்க்க வேண்டும் இயற்கையாக நிகழ்ந்த கொரனா தொற்று நோயால் ஊர் அடங்கியது. உலகம் அடங்கியது. அந்த 2020ஆம் ஆண்டில் மட்டும் உலகில் கார்பன் உமிழ்வு 7 சதவிகிதம் குறைந்த தாகப் புள்ளி விவரங்கள் கூறு கின்றன.

அப்படி ஒரு நிலைமை நிகழ்ந்தால்தான் கார்பன் உமிழ்வு குறையுமா? இயல்பாக எல்லா நாடுகளும் நடவடிக்கை எடுத்து கார்பன் உமிழ்வு குறையாதா? என்பது இன்றைய பெரும் கேள்வி. ஒவ்வொரு ஆண்டும் சூன் 5ஆம் தேதி சுற்றுச்சூழல் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. சுற்றுச் சூழல் கெடுதலினால் காலநிலை மாற்றம் எப்படியெல்லாம் நிகழ்கிறது என்பதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நாளாக அந்த நாள் அமைகிறது.

மரங்களின் தேவைகளை அன்று உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். இடையில் வந்த வர்கள் மரங்களை வெட்டி, காடுகளை அழித்தார்கள். விளைவு? ஓசோன் படலத்தில் ஓட்டை, தட்ப வெப்ப மாற்றங்கள். அடுத்து எதிர்காலத்தில் என்னென்ன இயற்கை சீற்றங்கள் நிகழுமோ என்ற கவலையால் உலகம் இன்று தத்தளித்துக் கொண்டுள்ளது என்று தமிழர் தலைவர் அய்யா ஆசிரியர் அவர்கள் 2007இல் (வாழ்வியல் சிந்தனைகள், பாகம் 4, பக்.186) குறிப்பிட்டார். இன்று நிகழும் இயற்கைச் சீற்றங்கள் உலகை அச்சுறுத்திக் கொண்டுள்ளன.

இந்திய அளவில், தரமான காற்று வீசும் நகரங்களின் பட்டியலில் தமிழ்நாட்டில் இருந்து திண்டுக்கல் நகரம் மட்டும் இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகரமும் கிராமமும் கார்பன் நெகட்டிவ் நகரங்களாக மாற வேண்டும். நல்ல தரமான காற்று வீசும் நகரமாக, ஊராக மாற வேண்டும். அதற்கு இலட்சக் கணக்கான மரங்கள் நடப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும். அதற்கான முயற்சி களைத் தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும். பொதுமக்களாகிய நாம் அதற்கான முழு ஒத்துழைப்பை அரசுக்கு அளிக்க வணே்டும்.

**நன்றி: உண்மை** இதழ், சூன் 1-15, 2023

**தரவு:** க. பழநிசாமி, தெ. புதுப்பட்டி



# வரப்பெற்ற (புது) நூல்கள்!

☆ **தமிழ்மணம்** - தொகுதி-4: - முனைவர் கடவூர் மணிமாறன், ரூ.400/- விடியல் வெளியீட்டகம், 1/53, பெரியார் நகர், குளித்தலை - 639 104. கரூர் மாவட்டம். பேச: 94431 44372

50 ஆண்டுகளுக்கும் மேலாகப் படைப்புலகில் பயணிக்கும் முனைவர் கடவூர் மணிமாறனின் தெரிவு செய்யப்பட்ட படைப்புகள் 10 தொகுதிகளாக வந்துள்ளன. அவற்றில் 4ஆவது தொகுதி இப்பாநூல். மொத்த தொகுதியும் சலுகை விலையில் ரூ.3000/-

☆ **இந்தியா - பாகிஸ்தான் போரும் விளைவும்:** - திருமதி சரோஜா சகாதேவன், ரூ.230/- மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராயநகர், சென்னை - 600 017. பேச: 91764 51934

இந்திய முப்படைகளின் சாதனைகளையும் வீரத்தையும் மனித நேயத்தையும் பேசும் நூல்.

☆ **தமிழ் இசையியலில் ஏற்றங்களும் மாற்றங்களும்:** - திருக்குறள் சொ. பத்மநாபன், ரூ,125/- மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பிராட்வே, சென்னை - 600 104. பேச: 044-2536 1039

தமிழ் மரபிசை தொடர்பான அனைத்துச் செய்திகளையும், குறிப்பாக தொல்காப்பியம், புறநானூறு, சிலப்பதிகாரம் கூறும் செய்திகளையும், பண் வகைகளையும், தாள வகைகளையும் பேசும் ஓர் ஆய்வு நூல் எனலாம்.

☆ **எல்லாம் எதற்காக?:** - ஆடானை சுகுமார், ரூ,150/-

சமூக சிந்தனையுள்ள கருக்களைச் சிறுகதைகளாக்கியுள்ளார் ஆசிரியர். அனைத்தும் வாழ்வில் நிகழ்ந்த சுவடுகள்.

☆ **என் எண்ணங்களில் பல வண்ணங்கள்:** - ஆடானை சுகுமார், ரூ.150/-

குழந்தைக் கவிஞர்களின் வரிசையில் இவரும் இடம்பெறுவது பாராட்டத்தக்கது.

மேற்கண்ட இரு நூல்களும் வெளியீடு: உதவும் உள்ளங்கள் பதிப்பகம், 12/16, பாரதி தெரு, ராம்நகர், அம்பத்தூர், சென்னை - 600 053. பேச: 94448 25419


கருத்துப்படம்
தமிழகத்தில்
2024, ஏப்ரல்,19 இல் வாக்குப்பதிவு
ஒரு நாள் பெரிய ஆள்... அடுத்த நாள்?
வாக்குச் சீட்டு
வாக்காளர்
வாக்குச் சேகரிக்கும் அரசியல் கட்சிகள்
— ஷைக்

(செவ்விலக்கியம்)

# உடம்பட வைத்தாள் உதவிடச் செய்தாள்!

– மு. வெங்கடேச பாரதி
99651 33874

அன்பழகியே! ஆருயிர்த் தலைவியே!

நேற்றுத் தினைப்புனத்திற்கு வந்த தலைவனை நீயறிவாயோ? நேரே எனைப் பார்த்துச் சொல்வாய்! செவ்வரக்கை வெண்சங்கின் மேலே தீற்றி வைத்தது போலத் தோன்றும் பிடவம்பூ! வெகு தொலைவுக்கு நறுமணத்தை வீசிக் கொண்டிருக்கும். அந்த மலர்களில் மகரந்தப்பொடி மெலிந்து நிறைந்திருக்கும்.

பூவதிலே புகுந்து பொறிவண்டு பொற்றுகளைப் பூசிக்கொள்ளும். அப்போதில் அவ்வண்டு கனகத்தின் மாற்றுப் பார்த்த கட்டளைக் கல்லாகக் காட்சியளிக்கும்; உள்வரிக் கோலம் கொண்டது போல உலவும்!

அத்தகைய வளமிகுந்த அழகுமலை தலைவன் அவன்! பேரழகு பெற்றிருக்கும் பெருமகன். செம்மனத்தான்; தண்ணளியான்; செங்கோலன்; மங்கையர்கள் தம்மனத்தை வாங்கும் தடந்தோளன்.

அவன்! செழித்துப் பணைத்திருக்கும் சிறுதினைக் கொல்லை தேடியிங்கு வந்தான்!

கருவி கொண்டு குருவி ஒட்டிக் கொண்டிருந்த நம்மருகில் வந்தான்; உன்னைக் கவர வந்தவனோ தினை கவர்ந்த கிளிகடிந்தவாறு நின்றான்! எனைக் கவர்ந்தான். இறுக இருந்த என்கை வளையலோ சிறுகச் சிறுகத் தாமே கழன்று தரையில் விழுந்தன. பண்பில்லா உணர்விலே பதைத்து மீண்டேன். முறையில்லா ஆசையை முடித்துப் போக்கினேன்.

வாசமில்லா மலரை நாடாத வண்டான அவனே வாழவைப்பான் என்றென் நெஞ்சிலே உண்டான எண்ணத்தை எடுத்தெறிந்தேன்.

அவனோ, நேராக நீ பார்க்கும் நேரத்திற்காக நின்றிருந்தான்; நீயோ

பாரா முகந்தன்னைப் பாடைத்திருந்தாய்! வேறான முகத்திலவன் வேதனை மிகவடைந்தான் - என்றுரைத்தாள் தோழி!

மாறுபட்டிருந்த தலைவியின் முகம் மலர்ந்தது. புலர்ந்த பொழுதிலே பூத்த பூவானது. இதழ்ப் பவளப் பேழையில் இடுக்கு ஏற்பட்டது. முத்தொளி கொஞ்சம் அதிலே தெரிந்தது.

தோழி, தலைவியின் பெருமையைச் சொல்லிக் காட்டினாள். தலைவனைத் தான் தகாத முறையில் காமுற்றதாகச் சாற்றினாள். தான்படைத்த கற்பனைக் காதலைத் தலைவியின் கருத்திலே ஏற்றினாள். அவள் பிடித்த பிடிவாதத்தை மாற்றினாள்! அவளை உடம்பட வைத்தாள் - காதலால் உதவிட செய்தாள்!

இப்பாடலைக் குறிஞ்சித்திணைப் பாடலாக் குறைநயப்புத் துறையில் பாடிய **பெரும்புலவர் பேரிசாத்தனார்**. நற்றிணை 25ஆம் பாடல்:

அவ்வளை வெரிநின் அரக்கு ஈர்த்தன்ன
செவ்வரி இதழ சேண்நாறு பிடவின்
நறுந்தாது ஆடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்உரை கல்லின் நல்நிறம் பெறூஉம்
வளமலை நாடன் நெருநல் நம்மொடு
கிளைமலி சிறுதினைக் கிளிகடிந்து அசைஇ
சொல்லிடம் பெறாஅன் பெயர்த்தனன் பெயர்ந்தது
அல்லல் அன்று அது-காதல்அம் தோழி!
தாதுஉண் வேட்கையின் போதுதெரிந்து ஊதா
வண்டு ஓரன்ன அவன்தண்டாக் காட்சி
கண்டும் கழல்தொடி வலித்தஎன்
பண்புஇல் செய்தி நினைப்பு ஆகின்றே!

அவ்வளை - அழகிய வளையல்
வெரின் - முதுகுபுறம்
சேண் - வெகுதொலைவு
நெருநல் - நேற்று
தாது - மகரந்தப்பொடி
தொடி - வளையல்

அசைஇ - சொல்லிசை அளபெடை
பெறாஅன் - செய்யுளிசை அளபெடை

# சிறுவர் பகுதி



**முகம்** மார்ச்-24 இதழில் சிறுவர் பகுதியில் வெளியான **'ஓர் எழுத்து இரு இடங்களில் நிரப்பிச் சொல் கண்டறிதல்'** பகுதிக்குச் சரியான விடை எழுதி பரிசுக்குத் தேர்வானவர்கள் (1) கு. சச்சின், 9ஆம் வகுப்பு, ச.மு.இ. மேல்நிலைப்பள்ளி, சீர்காழி, (2) எஸ்.விஜய், 12ஆம் வகுப்பு பெசன்ட் நகர், சென்னை, (3) அஜய், கீழ்க்கட்டளை, 4. தி.யோகப்பிரகாஷ், சீர்காழி.

குலுக்கல் முறையில் மூவரைத் தேர்வுசெய்து அவரவர் கைப்பேசிக்கு பரிசுத்தொகை அனுப்பி வைக்கப்பட்டது. பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்துகள்.

**விடை:**

1. அ**டு**த்த**டு**த்து
2. **க**ல**க**ம்
3. எ**ன்**றெ**ன்**றும்
4. கு**டு**கு**டு**ப்பை
5. ம**ன்**னவ**ன்**
6. க**ண்**க**ண்**ட
7. க**த**க**த**ப்பு
   **கலகல**ப்பு
   க**ரு**க**ரு**ப்பு
   க**டு**க**டு**ப்பு
8. கு**ழி**கு**ழி**யாக
   **குலைகுலை**யாக
9. நெ**டு**நெ**டு**வென
10. ப**டி**ப்ப**டி**யாக

## இம்மாதத்திற்கான திறனறி போட்டி:

**பொருத்துக:**

1. சென்னை - ஹௌரா பாலம்
2. மும்பை - சபர்பதி ஆஸ்ரமம்
3. கல்கத்தா - மெரினா கடற்கரை
4. அகதமாபாத் - சார்மினார்
5. ஹைதராபாத் - விதான சௌதா
6. பெங்களூரு - புதிய பாராளுமன்றம்

காழி முத்தமிழ் முற்றமும் முகம் இதழும் இணைந்து நடத்தும் சிறுவர்க்கான திறனறி போட்டி!

விடை அனுப்புவோருக்கு வழக்கம்போல் மூன்று பரிசுகள் உண்டு. விடை 15ஆம் தேதிக்குள் வரவேண்டும். பரிசுத் தொகை அவரவர் செல்பேசிக்கு அனுப்பி வைக்கப்படும்.

# வ.உ.சி. எழுதிய திருக்குறள் அறத்துப்பால்உரைக்கு அவரின் முன்னுரை!



'**சீ**ரெல்லாம் நிறைந்து விளங்கும் செந்தமிழ் நூல்களிற் சிறந்தது திருக்குறள் என்று வழங்கும் வள்ளுவர் நூல். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் போன்றோர் வள்ளுவத்திற்கு உரையெழுதினர். அப்பதின்மர் உரைகளில் தற்காலம் தமிழ் நாட்டில் பயின்று வருவது பரிமேலழகர் உரை ஒன்றே. அவ்வுரையைச் சில வருடங் களுக்கு முன்னர் யான் படிக்கத் தொடங்கினேன். அப்பொழுது மற்றைய ஒன்பதின்மர் உரை களையும் பார்க்கவேண்டு மென்னும் அவா எனக்கு உண்டாயிற்று. அதுமுதல், தமிழ் நூல்கள் இருக்கும் இடங்களில் அவற்றைத் தேடவும் தேடுவிக்கவும் முயன்றேன்.

அம்முயற்சியின் பயனாக எனக்குக் கிடைத்தவற்றில் மணக் குடவர் உரைப் பிரதி ஒன்று. அது வள்ளுவர் கருத்துகளைத் தெள்ளென விளக்குவதாகவும், இனிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றதாகவும் தோன்றிற்று. அதுபற்றி யான் அதனை அச்சிட்டு வெளிப்படுத்தக் கருதிச் சென்னை அரசாட்சியரது கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள மணக்குடவர் உரைப் பிரதியோடு ஒத்துப் பார்த்தேன். அரசாட்சிப் புத்தகச் சாலைப் பிரதியில் அதிகாரப் பெயரும், முறையும் பரிமேலழகர் உரையைப் பின்பற்றியிருக்கின்றன. அன்றியும், அதில் சில குறள்களின் மூலமும் உரையும் சிதைந்தும் குறைந்தும் இருக்கின்றன.

பின்னர் மஹாமஹோபாத் தியாயர் மகாஸ்ரீ உ.வே.சாமிநாத ஐயரவர்களிடத்துள்ள மணக்குடவர் உரைப் பிரதியைத் தருவித்துப் பார்த்தேன். அது, மேற்கூறிய அரசாட்சிப் புத்தகசாலைப் பிரதியி னின்று பிரதி செய்யப்பட்டதாகத் தெரிந்தது. ஆயினும் அதனை ஸ்ரீ சகஜானந்தா சுவாமியவர்களையும் துணையாகக் கொண்டு, எனது பிரதியில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் மூன்றையும் பரிந்து மணக்குடவர் உரையை ஒருவாறு பூரணமாக்கி அச்சிற்குக் கொடுத்தேன்.

அஃது அச்சாகி வருங்காலை யில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி கதோபாஷா அத்தியக்ஷகர் ஸ்ரீமான் தி. செல்வகேசவராய முதலியாரவர்களும், சென்னைக்

கிரிஸ்டியன் கல்லூரி சுதேசபாஷா அத்தியக்ஷம் ஸ்ரீமான் அ.கனக சுந்தரம் பிள்ளையவர்களும் அதனைப் பலமுறை பார்த்துச் சீர்படுத்தித் தந்தார்கள். அவர்களது அவ்வுதவியாலும் தென்னாப்பிரிக் காவிலுள்ள இந்திய சகோதரர்களது பொருளுதவியாலும் அறத்துப்பால் அச்சாகி முடிந்து இப்புத்தக வடிவமாக வெளிவருகிறது.

மணக்குடவரும் பரிமேலழ கரும் அதிகார முறையிற் சிறிதும் குறட்பாக்களின் முறையிற் பெரிதும் வேறுபட்டிருப்பதோடு, பல குறள் களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும் பலபல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்து முள்ளனர். இவ்வேற்றுமைகளைக் காண்பார் திருக்குறளின் பெருமை யையும் அதன் மூலபாடங்கள் வேறுபட்டுள்ள நன்மையையும் நன்கு அறிவதோடு, குறள்களுக்கு இவருவரும் உரைத்துள்ள பொருள் களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் புதிய பொருள்கள் உரைக்கவும் முயலுவர். அவர் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் விருப்பமே, யாம் இவ்வுரையை அச்சிடத் துணிந்ததற்கு முக்கிய காரணம்.

ஆண்பாலரும் பெண்பாலரு மான வித்தியார்த்திகள் இந்நூலை எளிதில் கற்குமாறு இதன் மூலத் தையும் உரையையும் மணக் குடவர் கருத்திற்கு இயைந்தபடி சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளேன். உரையில் யான் சேர்த்த எனது சொந்தச் சரக்குகளை ( ) இவ்வித இணைப்பகரக் குறிகளுக்குள் அமைத்துள்ளேன். இப்பதிப்புரை யின் பின்னர் அறத்துப்பாலின் அதிகார அட்டவணையொன்று சேர்த்துள்ளேன். குறள்களின் முதற்குறிப்பகராதி முதலியன முடிவில் சேர்க்கப்படும்.

இந்நூலை யான் அச்சிடுதல் சம்பந்தமாக மஹா மஹோபாத்தி யாயர் மகா.ரா.ஸ்ரீ உ.வே. சாமிநாதையரவர்களும், ஸ்ரீ சகஜாநந்தா சுவாமியவர்களும், ஸ்ரீமான் தி. செல்வகேசவ முதலியா ரவர்களும், ஸ்ரீமான் த.கனக சுந்தரம் பிள்ளையவர்களும், தென் ஆப்பிரிகாவிலுள்ள இந்தியச் சகோதரர்களும் எனக்குச் செய்த மேற்குறித்த நன்றிகள், காலத் தினாற் செய்தவையும் எழுமையும் - எழுபிறப்பும் உள்ளத் தக்கவை யாகும்.

இந்நூலின் ஒவ்வொரு பாலும் அச்சாகி முடிந்தவுடன் வெளி வருதல் நலமென்று எனக்கு இப்பொழுது தோன்றுவதனால், இன்று வரையில் அச்சாகி முடிந்திருக்கிற அறத்துப்பாலை இப்பொழுது வெளியிடுகிறேன். பொருட்பாலும் காமத்துப் பாலும் விரைவில் அச்சாகி வெளிவரும்.

இந்நூலை யான் அச்சிடத் தொடங்கிய பின்னர்க் காகிதத்தின் விலை மிக ஏறி விட்டதால், இதற்கு முன் குறித்த விலை ரூபா இரண்டை ரூபா மூன்றாக ஏற்றி, அதனை அறத்துப்பாலுக்கு ரூபா 1-0-0ம், பொருட்பாலுக்கு ரூபா 1-4-0ம், காமத்துப்பாலுக்கு

ரூபா 0-12-10வாக விதானம் செய்துள்ளேன்.

திருவள்ளுவர் திருக்குறளைக் கற்கும் ஒவ்வொருவரும், தமக்குக் கிடைக்கும் உரைகளைத் துணையாக வைத்துக் கொண்டு, குறள்களின் பொருள்களைத் தாமே ஆராய வேண்டுமென்பது என் விருப்பம். பரிமேலழகர் உரையையும் அதன்வழி வந்த உரைகளையும் தவிர, வேறு உரைகளை யாரேனும் காண்பாராயின் அவ்விவரத்தை எனக்குத் தெரிவிக்குமாறு அவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.'

**- வ.உ.சிதம்பரம்பிள்ளை**

நன்றி: தூத்துக்குடி முத்துக்குமார் சங்கரன் முகநூல் பக்கத்திலிருந்து.

விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சி. அவர்களின் காலத்தில் பரிமேலழகர் உரை மட்டுமே பரவலாகப் புழக்கத்தில் இருந்திருக்கிறது. இது போக, இன்னும் ஒன்பது உரைகள் இருப்பதை அறிந்து, வ.உ.சி. அவர்கள் தேடிச் சீர்செய்து 1917இல் குறளுக்கு உரை எழுதியுள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கற்றிய பெருமகனார் வ.உ.சி. அவரைப்போல் விடுதலைக்காக இழப்புகளையும், துன்பங்களையும் எதிர்கொண்டவர்கள் எவருமிலர். அப்பெருமகனார் தமிழிலும் ஆழங்கால் ஊன்றியவர் என்பதற்கு அவர் எழுதிய திருக்குறள் உரையும் அவ்வுரைக்கு எழுதிய முன்னுரையும் சான்றாகிறது. இன்றைய காலக்கட்டத்தில் திருக்குறளுக்குப் பலர் உரை எழுதுகின்றனர். அவையெல்லாம் இதைப்போன்று ஆய்ந்து எழுதப்படும் உரைதானா, பல உரைகளை ஒப்பிட்டு எழுதும் உரைதானா என்பது சிந்திக்கத் தக்கது. - ஆர்.

# தேர்தல் சிந்தனை!

**19.4.2024**இல் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நம்மை ஆளப்போவது யார் எனத் தீர்மானிக்கும் தேர்தல். நம் தாய்மொழியை, தமிழ் நிலத்தை, பண்பாட்டுத் தளத்தை, இளையோரின் எதிர்காலத்தை யாரிடம் ஒப்படைப்பது என்பதற்கான தேர்தல் இத்தேர்தல்.

முற்றிலும் தமிழர்களுக்கு எதிரானவர்கள் தமிழ்ப் பற்றாளர்கள் போல் வேடமிட்டுள்ளனர். தமிழர் என்போர் சிலரே அவர்களின் பல்லக்கைச் சுமந்து வருகின்றனர். இந்த உண்மையை ஊருக்கு உரக்கச் சொல்லவேண்டிய கட்டாயம் ஒவ்வொரு படைப்பாளிக்கும் உண்டு.

**- கவிஞர் வெற்றிப் பேரொளி**

# ஆளுநர் வெளியேற வேண்டும்!



**அ**ரசியலமைப்புச் சட்டத்தை அறியாதவர் எப்படி ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருக்க முடியும்? மக்களால் தேர்ந்தெடுக்கப்படாதவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கொள்கை முடிவுகளை எப்படி முடக்க முடியும்? ஆளுநர் என்றால் எல்லை மீறிய அதிகாரம் படைத்தவர் என்று எண்ணிக் கொள்வதா? ஆணவத்தின் உச்சத்தில் இருக்கும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு உச்சநீதி மன்றம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இத்தகைய உச்சக்கட்ட கண்டனத்தை இதுவரை எந்த ஆளுநரும் பெற்றதில்லை. "பொன்முடி அவர்களை இன்றோ அல்லது நாளைக்குள்ளோ அமைச்சராகப் பதவியேற்பு செய்யவில்லை என்றால் நாங்கள் உத்தரவிட வேண்டியிருக்கும்" என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு கூறியிருக்கிறது.

ஆளுநர் அரசமைப்புச் சட்டததை மீறுதல் இது முதல்முறை அல்ல. இதற்குமுன் மூன்றுமுறை உச்சநீதி மன்றத்தால் குட்டுப்பட்டுள்ளார். அரசியல் நாகரிகத்தையும் பண்பாட்டையும் கருதி, இனிமேலும் அவர் தமிழ்நாட்டு ஆளுநராக நீட்டிப்பதற்கு எந்தவித தார்மீக உரிமையும் இல்லை. அரசமைப்புச் சட்டப்படியும் உரிமை இல்லை. அவர் உடனடியாகப் பதவியிலிருந்து வெளியேற வேண்டும். இன்னுங்கேட்டால், இதற்குப் பொறுப்பேற்க வேண்டியது ஒன்றிய உள்துறைதான். அவருடைய நியமனத்திற்குக் காரணமானவர்கள், உடனடியாக அவரைத் திரும்பப் பெற வேண்டும். அப்படித் திரும்பப் பெறவில்லை என்றால், அவர்களும் சேர்ந்து இந்த நிலைமைக்குக் காரணமாக இருக்கிறார்கள் என்ற செய்தி வெளியுலகிற்கு மட்டுமல்ல, உச்சநீதி மன்றத்திற்கும் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். சட்டமன்றத்தின் மரபையே உடைத்து இதுவரையில் இல்லாத கொடுமைகளை நடத்தி வருகின்றார் ஆளுநர் ரவி. வேண்டுமென்றே சர்ச்சைக்குரிய கருத்துகளைக் கூறுவது, அதன் மூலம் பத்திரிகை விளம்பரம் தேடுவது, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் போல் நடந்து கொள்வது போன்ற மரபு மீறல்களை நடத்திக்கொண்டிருக் கின்றார். இவ்வளவு அசிங்கப்பட்ட அரசியல் அநாகரிகமான ஆளுநரை வேறு எங்கும் பார்க்க முடியாது. 76 ஆண்டுக்கால சுதந்திர வரலாற்றில், தமிழ் நாட்டிற்கு இப்படி ஒருவர் ஆளுநர் கிடைத்ததில்லை. எனவே, ஆளுநர் ரவி உடனடியாகத் தமிழ்நாட்டை விட்டு வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டும்.

**- ஆசிரியர் கி. வீரமணி**
தலைவர், திராவிடர் கழகம்



சென்ற இதழ் தொடர்ச்சி:

# அறிவுச் சுரங்கம் அப்பாத்துரையார்



- முகம் மாமணி

25

## தட்டுங்கள் திறக்கப்படும்! கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வ**ழக்கம்போல், 'வணக்கம் அய்யா, மணி வந்திருக்கிறேன்!' என்று சொல்லிக்கொண்டே அப்பாவின் அறைக்குள் நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்தேன்.

அவர், 'வாங்க... வாங்க... உட்கார்ந்துவிட்டீர்களா' என்று கேட்டுவிட்டு, ஏதாவது பேசத் தொடங்கிவிடுவார். ஆனால் அன்று நீண்ட நேரம் மவுனமாக எதையோ யோசித்துக் கொண்டிருந் துவிட்டு, 'மாமணி...! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அப்படிச் செய்யலாமா என்று ரெண்டு நாளாகச் சிந்தித்துக் கொண்டிருக் கிறேன்...'

'சொல்லுங்கள் அய்யா!'

'கடந்த மூன்று ஆண்டு களாக நீங்கள்தான் தொடர்ந்து வந்து என் வாழ்க்கை வரலாற்றின் பெரும் பகுதியை எழுதி முடித்து விட்டீர்கள். அதற்குமேல் உங்கள் அனுபவத்தைக் கொண்டே என் வாழ்க்கை வரலாற்றை நீங்கள் முற்றுப்பெறச் செய்துவிட முடியும், இல்லையா?'

'ஆமாம் அய்யா...!'

'என் வரலாறு இப்பொழுது முகத்தில் எத்தனை மாதங்களாக வந்து கொண்டிருக்கிறது?'

'இருபத்திரண்டு மாதங் களாக...!

'எப்பொழுது முற்றுப்பெறும் என்று சொல்ல முடியாதல்லவா?'

'ஆமாம் அய்யா, கடலில் இறங்கி நீந்திக் கொண்டிருக்கிறேன். எப்போது கரை சேருவேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் என் கைகள் ஓயுமட்டும் நீந்திச் செல்வேன்!'

'இந்தப் பதிலைக் கேட்டு அப்பா தனக்குத்தானே சிரித்துக் கொள்கிறார். பிறகு, என் வரலாறே வெளி உலகத்துக்குத் தெரியாமல், நான் எங்கே இறந்து போவேனோ

என்று ஒரு பயம் முன்பு இருந்தது. என் பாஸ்வெல்லாகிய நீங்கள் வந்த பிறகு, எனக்கு இப்போது அந்தப் பயம் இல்லை. ஆனால்...'

'சொல்லுங்கள்...!'

பல ஆண்டுகளுக்கு முன்னால், திருக்குறள் மணி விளக்க உரை வெளிவந்ததைப் பார்த்த தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் ஒருநாள், "இவ்வளவு அருமையான கருத்துகளை யெல்லாம் தமிழர்களுக்கே எழுதி என்ன பயன்? இந்தப் பெருமை களையெல்லாம் வெளி நாட்டார் அறிந்துகொள்ள வேண்டு மென்றால் திருக்குறளின் இந்தக் கருத்துகளையெல்லாம் நீங்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டும். நீங்கள் எழுதித் தந்தால் நானே வெளியிட்டு உலகமெல்லாம் பரப்புகிறேன்" என்றார்.

அவர் சொன்ன கருத்து எனக்கும் சரியென்றே பட்டது. ஆகவே அவர் பல வசதிகளும் செய்து கொடுத்தார். நானும் இரவு பகல் பாராமல் பல மாதங்கள் அரும்பாடுபட்டுத் திருக்குறளைப் பற்றி ஒரு நீண்ட முன்னுரையோடு எழுதிக் கொடுத்தேன். அவற்றை யெல்லாம் உடனுக்குடன் தட்டச்சு செய்துவிட்டார்கள்.

கையெழுத்தில் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு பக்கங்கள் இருக்கும்!' என்று அவர் சொன்னதைக் கேட்டதும் நான் அதிர்ந்துபோய், 'இரண்டாயிரத்து ஐந்நூறு பக்கங்களா?' என்றேன்.

'ஆமாம்! முன்னுரையே ஐந்நூறு பக்கங்களுக்கு மேல் இருக்கும். அதை ஒரு வெளி நாட்டான் படித்தால், தமிழ்நாட்டின் கலை, பண்பாடு, திருக்குறள், திருவள்ளுவர்.... என்று முழுமை யாகத் தெரிந்து கொள்வான்!'

'சரி, திருக்குறள் 133 அதிகாரங்களையும் மொழி பெயர்த் துவிட்டீர்களா?'

'இல்லை. 38 அதிகாரங்கள் - அறத்துப்பால் மட்டும்தான்.'

'என்ன அய்யா இது? முன்னுரை ஐந்நூறு பக்கங்கள், 38 அதிகாரங்களுக்கு மட்டும் இரண்டாயிரம் பக்க உரை என்றால்...? இதை எப்படி வெளியிட முடியும்? யார் வாங்குவார்கள்? இவ்வளவையும் யார் பொறுமை யாகப் படிப்பார்கள்? 38 அதிகாரங் களுக்கு இரண்டாயிரம் பக்க உரை என்றால் மீதமுள்ள 95 அதிகாரங்களுக்கும் எத்தனை ஆயிரம் பக்கங்களில் உரை எழுதப் போகிறீர்கள்?' என்று கேட்டுவிட்டு, வள்ளுவன் கடலைக் கடுகுக்குள் திணித்தான். இவரோ, கடுகை கடலாக்கும் முயற்சியில் இறங்கி யிருக்கிறாரே என்று ஒரு கணம் நானே குழம்பிப் போனேன்.

நான் மவுனமாக இருப்பதைப் பார்த்து, 'என்ன

திகைத்து விட்டீர்கள்! இது அவருக்கு (மகாலிங்கத்துக்கு) பெரிய காரியமல்ல; மனம் வைத்தால் முடித்து விடுவார். முதல் தொகுதி மட்டும் வெளிவந்திருந்தால், அடுத்தடுத்து பல தொகுதிகளை நான் இந்நேரம் எழுதி முடித்து விட்டிருப்பேன்...!'

'சரி, அவரிடம் கொடுத்த முதல் தொகுதி என்ன ஆயிற்று?'

'அதைத்தான் இப்போது சொல்லப்போகிறேன். நான் கொடுத்துப் பல மாதங்களாகியும் ஒரு தகவலும் தெரியவில்லை. மகாலிங்கத்தின் செயலாளராக இருந்த அவ்வை நடராசனை ஒரு நிகழ்ச்சியில் பார்த்தேன். "அய்யாவிடம் கொடுத்தது என்ன ஆயிற்று? எந்த அளவுக்கு வேலை நடக்கிறது!" என்று கேட்டேன்.

'கேட்டுச் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றவர், மூன்றாம் நாளே அவ்வளவையும் திருப்பிக் கொண்டுவந்து கொடுத்து விட்டு, 'அய்யா உங்களிடம் கொடுத்துவிடச் சொன்னார்! என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்!' என்று சொல்லி முடிக்கும்போது, அப்பாவின் கண் இமைகள் கசிந்தன. பெருமூச்சு விட்டார்.

'என்ன செய்வதென்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் இவரிடம் தகவலாகக் கேட்டதை, இவர் அவரிடம் எந்தச் சூழ்நிலையில் எப்படிச் சொன்னாரோ? அதனால் சீற்றமடைந்து திருப்பிக் கொடுக்கச் சொல்லி விட்டாரோ என்று மனம் நொந்து போனேன். மகாலிங்கத்திடம் தொலைபேசியில் தொடர்பு கொள்ள பல நாட்கள் முயன்றும் கிடைக்கவில்லை. கடிதங்கள் எழுதிக் காரணம் கேட்டும் பதிலில்லை. பிறகு நேரே சென்று கண்டு உண்மை விளக்கம் பெறலாம் என்று பலமுறை முயன்றும் பார்க்க மறுத்துவிட்டார்.'

சிறிது நேரத்திற்குப் பிறகு, 'நீங்கள் அவரை (மகாலிங் கத்தை)ப் பார்த்துத் தகவல் அறிய முடியுமா?' என்றார்.

பல பூசாரிகளைக் கடந்து தான் அவரைத் தரிசிக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஒருமுறை பேராசிரியர் நாரண. துரைக் கண்ணன் தம் கைப்பட ஒரு கடிதம் எழுதி மகாலிங்கத்திடம் கொடுத்து நேரில் பார்க்குமாறு சொன்னார். செயின்ட் மேரீஸ் சாலையிலுள்ள அவர் வீட்டிற்குச் சென்று, காவலாளியிடம் விசாரித்தேன். 'அய்யா இருக்கிறார். நீங்கள் யார்? என்ன வேண்டும்?' என்று கேட்டார்.

நான் முகம் பத்திரிகையின் ஆசிரியர். அவருக்கு மாதந்தோறும் பத்திரிகை அனுப்புகிறேன். அவருக்குக் கொடுக்க ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லி என்னுடைய விசிட்டிங் கார்டைக் கொடுத்து அனுப்பினேன்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து, 'அய்யா பார்க்க மறுக்கிறார். பகீரதன் சாரைப் பாரக்கச் சொன்னார்' என்றார்.

அவரைப் பார்க்கச் சென்றேன். அன்று அவருக்கு விடுமுறை நாளாம். பிறகு இரண்டு நாட்களுக்குப் பிறகு அவரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தேன். இரண்டு ஆண்டுகள் ஆகியும் இதுவரை எந்தப் பதிலும் இல்லை. ஆகவே உங்களுக்காக நான் சென்று என்ன செய்ய முடியும்' என்றேன்.

'ஒரு வாரத்துக்கு முன்னால் ஒருவர் வந்தார். அவர் ரெயில்வே யில் பெரிய அதிகாரியாம். அவருக்கு மாக்மில்லன் கம்பெனி யில் (ஆங்கிலப் புத்தகங்கள் வெளியிடும் உலக நிறுவனம்) செல்வாக்கு உண்டாம். அந்தக் கம்பெனி மூலம்தான் வெளியிடச் சொல்லிவிட்டுச் சென்றார். அவர் செய்வார் என்று நம்புகிறேன்' என்றார்.

அதைக் கேட்டு நான் சிரித்தேன்.

'என்ன சிரிக்கிறீர்கள்?'

அய்யா! எண்பது வயதுக்கு மேல் ஆகியும் இன்னும் ஒரு குழந்தையைப்போல் ஏமாந்து போகிறீர்களே! தங்கள் காரியங் களைச் சாதித்துக் கொள்ள நினைக்கிறவர்கள் உங்களை அவ்வளவு சுலபமாக ஏமாற்றி விடுகிறார்கள்...!' என்று நான் கவலைப்படுவதைக் கேட்டு,

'என்ன செய்வது! என் காலமெல்லாம் இப்படியே போய்க் கொண்டிருக்கிறது. அண்ணா முதலமைச்சராக இருந்தபோது அவரைக் கொண்டு வெளியிட எண்ணியிருந்தேன். பிறகு கலைஞர் வந்த பிறகு அவரைக் கொண்டு முயற்சி செய்யலாம் என்று நினைத்திருந்தேன். அவருடைய அமைச்சரவையும் அப்போது திடீரென்று கலைக்கப் பட்டுவிட்டது. எம்.ஜி.ஆரிடமும் கேட்டோம். பலனில்லை. இப்போது ஏதோ ஒரு நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று நினைக் கிறேன். கலைஞரே மீண்டும் முதலமைச்சராக வந்திருக்கிறார்!

அவரை நேரில் சென்று பாராட்ட மனம் துடிக்கிறது. ஆனால் பார்வையற்ற என்நிலை அதற்குத் தடையாக இருக்கிறது. அலமேலுவை அனுப்பினேன். கலைஞர் வீட்டில் மாலையும் கையுமாக காலையிலிருந்து பகல் வரை காத்திருந்துவிட்டு கலைஞரைப் பார்க்க முடியாம லேயே திரும்பி வந்துவிட்டாள்!

கலைஞருக்கு எங்கள் குடும்பத்தின் மேலுள்ள கோபம் இன்னும் தணியவில்லை என்று தெரிகிறது!

அண்ணாவும் - கலைஞரும் அருகருகே அப்பாவின் வீட்டில்

உணவு உண்ணுகிறார்கள். அவர்களுக்கு அம்மா (அலமேலு) பறிமாறுவது போலுள்ள ஒரு புகைப்படம் சுவரில் தொங்குகிறது. அதைப் பார்த்துக் கொண்டே, 'கலைஞருக்கு உங்கள் குடும்பத்தின் மேல் அப்படி என்ன கோபம்?'

'எல்லாம் அவளால் (அலமேலு) வருகிற வம்புகள்தான். அவளுடைய நாக்கும் செயலும் பலரையும் எனக்கு எதிரிகளாக்கி விட்டன!'

பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கனார், அப்பாவின் நூல் படியைத் திருப்பிக் கொடுத்ததற்கும் அம்மாவின் பேச்சுதான் காரணம் என்கிறார் திரு. பகீரதன் (நா.ம.வின் செயலர்). - மாமணி

'உங்களுக்கு எதற்குய்யா அரசியல்? நீங்கள் பொது மனிதரைப்போல் இருக்க வேண்டியவர். நீங்கள் மட்டும் ஒரே நிலையில் இருந்திருந்தால், திராவிட இயக்கத்தையும் பெரியாரையும் அண்ணாவையும் காலமெல்லாம் மதித்து அரசியல் நடத்தியவர், தமிழின் பெயரால் உட்கார்ந்திருந்த உயர் மட்டங்களிலெல்லாம் நீங்கள் அல்லவா உட்கார்ந்திருப்பீர்கள்!' என்று கொஞ்சம் கடுமையாகவே அவரிடம் சொல்லிவிட்டேன்.

அவர் பதில் ஏதும் சொல்லாமல் மவுனமாகத் தலை அசைத்தார். பிறகு 'முகம்' ஆசிரியர் என்ற முறையில் உங்களைப் பலரும் பாராட்டுவதைக் கேட்டிருக்கிறேன். நீங்களே கலைஞரையும் பேராசிரியரையும் சந்தித்து என் நிலையை விளக்கினால் என்ன?'

'கஜானாவும் காலி. களஞ்சியமும் காலி என்ற நிலையில் வந்து அமர்ந்துள்ளார்கள். கொஞ்ச நாள் ஆகட்டும். எனக்கு ஒரு யோசனை உண்டு. அதாவது நாரண. துரைக்கண்ணனார், வள்ளுவ ஓவியர் வேணுகோபால சர்மா, நீங்கள் மூவரும் எண்பது வயதைக் கடந்தவர்கள். இந்த மூத்த மூன்று மூதறிஞர்களையும் தமிழக அரசு சிறப்பிக்க வேண்டும் - என்ற ஒரு வேண்டுகோளைக் கலைஞரிடமும் பேராசிரியரிடமும் வைக்கலாம் என்று இருக்கிறேன்.'

தட்டுங்கள் திறக்கப்படும்!
கேளுங்கள் கொடுக்கப்படும்!

என்ற வாசகம் எனக்கு ஊக்கம் தருகிறது. முயன்று பார்ப்போம்' என்றேன்.

'மாமணி! இன்னொன்றும் நீங்கள் செய்யலாமே!'

'என்ன அய்யா?'

'நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை பிராட்வேயில் திருக்குறள் மாநாடு நடத்தினார் பெரியார். அப்போது திருக்குறளுக்கு அறிவு பூர்வமான ஒரு உரை இல்லையே! நீங்களெல்லாம்


பன்மொழி பிடித்து என்ன பயன்? ஒரு நல்ல உரை எழுத முடிய வில்லையே என்று என்னைக் கடிந்து கொண்டார்.

அதை மனத்தில் கொண்டே ஒவ்வொரு குறளுக்கும் நான்கு வரிகளில் தெளிவுரையும் ஒரே வரியில் கருத்துரையும் எழுதி வைத்துள்ளேன். டாக்டர் மு.வ. வின். திருக்குறள் தெளிவுரைக்கும் முன்பே அது வெளிவந்திருக்க வேண்டும். அப்படி வெளி வந்திருந்தால், மு.வ.வின் உரை போல் என் உரையும் தமிழன் வாழும் இடங்களிலெல்லாம் பரவி இருக்கும். அந்த வாய்ப்பும் எனக்கு நிறைவேறாமல் போய்விட்டது.

இப்போது நீங்களாவது அதை நூலாக வெளியிடுங்களேன்! என்று 133 அதிகாரத்துக்குமான அந்த உரையைத் தேடி எடுத்துத் தருகிறார். அதைப் புரட்டிப் பார்க்கிறேன்.

பிறகு, 'அய்யா, இதை நூலாக வெளியிடும் அளவுக்கு எனக்குப் பொருள் வசதி இல்லை. ஆனால் ஒன்று செய்கிறேன். ஒவ்வொரு மாதமும் முகம் இதழில் ஒரு அதிகாரம் வீதம் வெளியிட்டு வருகிறேன். அதுதான் என்னால் முடியும். அதைப் பார்த்து எந்த வள்ளலாவது, பதிப்பகத்தாராவது நூலாக்க முன்வந்தால், அவர்களுக்கு உரிமை கொடுங்கள்! - என்று கூறிவிட்டு விடை பெற்றேன். அப்போது அப்பாவின் வாய் "தட்டுங்கள் திறக்கப்படும்! கேளுங்கள் கொடுக்கப்படும்!" என்று முணுமுணுப்பதைக் கேட்டுச் சிரித்தபடியே வெளியே வருகிறேன்!

# நினைவேந்தல்!



**பே**ரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள்முதல் தி.மு.க.வின் செயல்பாடுகளில் தம்மை இணைத்துக்கொண்டு செயலாற்றியவர். கட்சியின் முக்கிய பொறுப்புகளில், குறிப்பாகத் தேர்தல் களங்களில் பணியாற்றிய பெருமகனார், அனைத்துக் கட்சியினராலும் மதிக்கப்பெற்றவர் **முன்னாள் மேயர் சா. கணேசன்** அவர்கள்.

பண்பாளரான அவருடைய 6ஆம் ஆண்டு நினைவேந்தல் 13.4.2024. அவரை நெஞ்சில் நிறுத்திப் போற்றுவோம்.